தினபூமி
thinaboomi.com
மதுரை, வெள்ளி, மார்ச் 28, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



**இறக்குமதி வாகனங்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும்: அமெரிக்க அதிபர் அறிவிப்பு**
...2-ம் பக்கம்

**தொகுதி மறுவரையறைக்கு எதிராக தெலுங்கானா சட்டமன்றத்தில் தீர்மானம்**
...3-ம் பக்கம்

**இங்கிலாந்து தொடரில் இருந்து ரோகித் விலகல்: அணியின் புதிய கேப்டன்?**
...6-ம் பக்கம்



### சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த

# வக்பு திருத்த சட்டத்திற்கு எதிரான தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்

## அ.தி.மு.க. - பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளும் ஆதரவு

சென்னை, மார்ச் 28-

**தமிழ்நாடு சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த வக்பு திருத்த மசோதாவுக்கு எதிரான தனித்தீர்மானம் அ.தி.மு.க. - பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் ஆதரவோடு நிறைவேற்றப் பட்டதாக சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.**

**முதல்வர் தனித்தீர்மானம்...**

சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995-ம் ஆண்டின் வக்பு சட்டத்தை திருத்துவதற்கு, கடந்த 2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்திய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு வாரிய சட்டத்திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை இந்த பேரவை வலியுறுத்துகிறது என்று சட்டப் பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

**உள்நோக்கத்துடன்...**

பேரவையில் நேற்று (மார்ச் 27) தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் வக்பு சட்டத்திருத்தத்துக்கு எதிரான தனித்தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியதாவது:- மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி அரசானது தனது செயல்பாடுகள் அனைத்தையும் ஒருவிதமான உள்நோக்கம் கொண்டதாக செய்து வருகிறது. எதை செய்தாலும், குறிப்பிட்டத் தரப்பை வஞ்சிக்கும் வகையில்தான் திட்டங்களைத் தீட்டுகிறார்கள். குடியுரிமைத் திருத்தச் சட்டமானது சிறுபான்மை இஸ்லாமிய மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் வஞ்சித்தது. இந்தியைத் திணித்து, இந்திப் பேசாத மாநிலங்களை வஞ்சிக்கிறது. பா.ஜ.க. ஆளாத மாநிலங்களை நிதி நெருக்கடி மூலமாக வஞ்சிக்கிறது. சமூக நீதிக்கு எதிரான அவர்களது செயல்பாடுகள் பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை வஞ்சிக்கிறது.

**கடும்மையாக எதிர்ப்பு...**

நீட் மற்றும் தேசியக் கல்விக் கொள்கையானது அடித்தட்டு மக்களை பாதிப்பதாக அமைந்ததை அனைவரும் அறிவோம். இந்த வரிசையில் கொண்டு வரப்படும், வக்பு வாரிய சட்டத் திருத்தமானது சிறுபான்மையின இஸ்லாமிய மக்களை வஞ்சிப்பதாக அமைந்ததை நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும். வக்பு சட்டமானது 1954-ம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் 1995, 2013 ஆகிய ஆண்டுகளில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதில் இன்றைய மத்திய பா.ஜ.க. கூட்டணி அரசு சில திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான முன்வரவினை கடந்த 8.8.2024 அன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. வக்பு நிர்வாகத்தில் அரசியல் தலையீட்டை ஆதரிப்பதாகவும், மத உரிமைகளைப் பாதிப்பதாகவும், மத்திய அரசின் சட்டத்திருத்தங்கள் இருந்ததால், அதனை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தோம்.

**மத்திய அரசின் கட்டுப்பாடு...**

எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த நிலையில், பாராளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு இதனை அனுப்பினார்கள். இந்த சட்டத்தை நாம் எதிர்ப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. வக்பு சட்டத்தை திருத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய மோசமான விளைவுகள் ஏற்படும். வக்பு சட்டத்தை மத்திய அரசு திருத்த நினைக்கிறது. இதன்மூலம் மத்திய வக்பு கவுன்சில் மற்றும் மாநில வக்பு வாரிய கட்டமைப்புகள் மாற்றப்பட்டு அரசின் கட்டுப்பாடு அதிகரிக்கிறது.

**அச்சம் உருவாக்கம்...**

5 ஆண்டுகளுக்கு குறையாமல் இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒரு நபர் மட்டும் வக்பு அறிவிக்க முடியும் என்று கட்டுப்படுத்துகிறது. இது முஸ்லிம் அல்லாதவர்களால் உருவாக்கப்பட்ட வக்பு சொத்துகளை செல்லாதவை என்று ஆக்கலாம் என்ற அச்சத்தை உருவாக்குகிறது. இஸ்லாமிய மக்களின் இரண்டு குறிப்பிட்ட வகுப்பினருக்கு தனி சொத்து வாரியம் உருவாக்க முயற்சி செய்கிறார்கள். மாநில வக்பு வாரிய உறுப்பினர்களுக்கும், தலைவருக்கும் தேர்தல் முறையானது ரத்து செய்யப்பட்டுள்ளது. மாநில வக்பு வாரியங்களில் இரண்டு முஸ்லிம் அல்லாத உறுப்பினர்களை, சேர்க்க வேண்டும் என்று இந்த சட்டம் கட்டாயப்படுத்துகிறது.

**அச்சப்படுகிறார்கள்...**

இது முஸ்லிம்களின் மத நிர்வாகத்தில் அரசு தலையிடுவதாகும். வக்பு சொத்துக்களை பதிவு செய்யும் முன்பு மாவட்ட ஆட்சியர் சரிபார்க்க வேண்டும் என்று இந்த சட்டம் கூறுகிறது. இது அரசு இந்த சொத்துக்களை கைப்பற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதாக முஸ்லிம்கள் அச்சப்படுகிறார்கள்.

(கடைசி பக்கம் பார்க்க)



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சட்டமன்ற பேரவையில், மத்திய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாக திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி, அரசின் தனித் தீர்ானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

### வக்பு சட்டத்திருத்தம் குறித்த விவகாரம்:

# சட்டப்பேரவையில் இ.பி.எஸ்.க்கு முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 28-

**எடப்பாடி பழனிசாமி அடுத்தமுறை டெல்லி செல்லும்போது வக்பு சட்டத்திருத்தம் குறித்து வலியுறுத்த வேண்டுகோள் வைக்கிறேன் என்று நேற்று சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும் வக்பு திருத்த மசோதாவுக்கு எதிரான தனித் தீர்மானத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்து முன்மொழிந்தார். பின்னர் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது. அப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது கருத்துகளை தெரிவித்தனர்.

வக்பு தீர்மானத்திற்கு பாஜக மட்டும் எதிர்ப்பு தெரிவித்து சட்டசபையில் இருந்து வெளியேறியது. அ.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகள் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தன. இதனையடுத்து வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிராக முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தனித் தீர்மானம் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், அ.தி.மு.க.வினருக்கு நான் வைக்கும் கோரிக்கை... நேற்று முன்தினம் (கடந்த 3 தினங்களுக்கு முன்பு) இதே அவையில் இருமொழிக் கொள்கை பிரச்சினை குறித்து பேசுகையில் நான் ஒன்று சொன்னேன், எதிர்க்கட்சித் தலைவர் டெல்லி சென்றிருக்கிறார். அங்கு யாரை சந்திக்க உள்ளார் என்ற செய்தியும் கிடைத்திருக்கிறது என்று கூறினேன்.

ஆனால் டெல்லியில் என்னுடைய கட்சி அலுவலகத்தை பார்வையிட வந்தேன் என்று சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, மாலையில், கார்களை மாறி மாறி உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்துள்ளார். அது தவறில்லை; அங்கு போய் தமிழகத்திற்கு வேண்டிய உரிமைகளை கேட்டிருக்கிறேன் என்று சென்னைக்கு வந்த பிறகு தெரிவித்துள்ளார். அதற்காக இந்த அவையின் சார்பில் அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படி, இருமொழிக் கொள்கை குறித்து வலியுறுத்தி வந்துள்ளேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொன்னாரோ, அது போலவே அடுத்த முறை டெல்லி செல்லும் போது வக்பு சட்டத்திருத்தம் குறித்து வலியுறுத்த வேண்டுகோள் வைக்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# ஜூன் 2-ல் தமிழ்நாடு அரசு சார்பில் இளையராஜாவுக்கு பாராட்டு விழா

சென்னை, மார்ச் 28-

**இசைஞானி இளையராஜாவுக்கு அவரது பிறந்த நாளான ஜூன் 2-ம் தேதி தமிழக அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

இசையமைப்பாளர் இளையராஜா மேற்கத்திய - கர்நாடக இசை கலந்த 'வேலியண்ட்' பாரம்பரிய சிம்பொனி இசை நிகழ்ச்சியை லண்டனில் உள்ள அப்பல்லோ அரங்கத்தில் கடந்த மார்ச் 8-ஆம் தேதி அரங்கேற்றினார். சிம்பொனி இசை நிகழ்ச்சியை அரங்கேற்றம் செய்து இந்தியாவுக்கு பெருமை சேர்த்த இளையராஜாவை பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் நேரில் வாழ்த்தியிருந்தனர்.

லண்டனில் இருந்து இளையராஜா திரும்பியபோதே, அரை நூற்றாண்டு இசைப் பயணத்தை கொண்டாடும் விதமாக தமிழக அரசு தரப்பில் பாராட்டு விழா நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தமிழக சட்டப்பேரவையில் வியாழக்கிழமை பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், இளையராஜாவின் பிறந்த நாளான ஜூன் 2 ஆம் தேதியே அவருக்கு அரசுத் தரப்பில் பாராட்டு விழா நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்.



### பி.எம்.ஶ்ரீ திட்டத்தை ஏற்காத மாநிலங்களுக்கு

# நிதியை உடனே விடுவிக்க வேண்டும்: பாராளுமன்ற நிலைக்குழு பரிந்துரை

புதுடெல்லி, மார்ச் 28-

**புதிய கல்விக் கொள்கையின் பள்ளிகளுக்கான பி.எம்.ஸ்ரீ திட்டத்தை ஏற்காத மாநிலங்களுக்கு சர்வ சிக்ஷா அபியான் நிதியை உடனடியாக விடுவிக்க பாராளுமன்ற நிலைக் குழு பரிந்துரைத்துள்ளது.**

புதிய தேசிய கல்விக் கொள்கையை (என்.இ.பி) செயல்படுத்த தி.மு.க. தலைமையிலான தமிழக அரசு மறுத்துள்ளது. இதைத் தொடர்ந்து, தமிழக பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.2,100 கோடிக்கும் அதிகமான நிதியை மத்திய கல்வித் துறை அமைச்சகம் நிறுத்தி வைத்துள்ளது. இப்பிரச்சனையில் மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே வார்த்தைப் போரும் நடைபெற்று வருகிறது. இந்தச் சூழலில் என்.இ.பி. 2020 அல்லது பி.எம்.ஶ்ரீ திட்டத்தை ஏற்காத மாநிலங்களுக்கும் நிதி எதுவும் நிலுவையில் இல்லாததை உறுதி செய்ய வேண்டும் என்றும் பாராளுமன்ற நிலைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இது குறித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திக்விஜய் சிங் தலைமையிலான நிலைக் குழுவின் அறிக்கையின் விவரம்: பி.எம்.ஶ்ரீ திட்டத்தை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடாத சில மாநிலங்களுக்கு சர்வ சிக்ஷா அபியான் திட்டத்துக்கான நிதியை விடுவிக்காததை குழு கவனித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சில மாநிலங்களுக்கு பெருந்தொகை நிலுவையில் உள்ளது.

36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 33 மாநிலங்கள் பி.எம்.ஶ்ரீக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. மேலும், இந்தத் திட்டத்தை செயல்படுத்தியும் வருகின்றன. தேசிய அளவில் மதிப்பீடு மற்றும் பாடத்திட்டத்தில் சமமான நிலையை உருவாக்க என்.இ.பி. 2020 ஒரு முன்மாதிரியான பள்ளிகளை உருவாக்குகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் இணக்கமாகப் பேசி இந்தப் பிரச்சினைக்கு மத்திய அரசு தீர்க்க வேண்டும். நிலுவையில் உள்ள நிதியை முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்க வேண்டும்.

மத்திய ஒதுக்கீடுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதால், ஆசிரியர்கள் மற்றும் அதன் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க இந்த மாநிலங்கள் தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. பி.எம்.ஶ்ரீ போன்ற தனித் திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யாததற்காக சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் நிதியை மாநிலங்களுக்கு நிறுத்தி வைப்பது நியாயமானது அல்ல. கேரளா, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களுக்கு நிலுவையில் உள்ள சர்வ சிக்ஷா அபியான் நிதியை உடனடியாக விடுவிக்க குழு பரிந்துரைத்துள்ளது என்று அந்த சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 9 லட்சம் மாணவ-மாணவிகள் எழுதும்

# 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு தமிழகத்தில் இன்று துவக்கம்

சென்னை, மார்ச் 28-

**தமிழகத்தில் 9 லட்சம் மாணவ-மாணவிகள் எழுதும் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு இன்று தொடங்குகிறது.**

பிளஸ்-2 மாணவ-மாணவிகளுக்கான பொதுத் தேர்வு கடந்த 3-ந்தேதி தொடங்கி கடந்த 3 தினங்களுக்கு முன் நிறைவு பெற்றது. இதே போல், பிளஸ்-1 வகுப்புக்கான பொதுத் தேர்வு கடந்த 5-ம் தேதி தொடங்கிய நிலையில், அவர்களுக்கு நேற்றுடன் (வியாழக்கிழமை) முடிவடைந்தது.

இதனைத் தொடர்ந்து 10-ம் வகுப்பு மாணவ-மாணவிகளுக்கான பொதுத்தேர்வு இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்கி அடுத்த மாதம் (ஏப்ரல்) 15-ந்தேதி வரை நடைபெற இருக்கிறது. இந்த தேர்வை 4 லட்சத்து 46 ஆயிரத்து 411 பள்ளி மாணவர்கள், 4 லட்சத்து 40 ஆயிரத்து 465 பள்ளி மாணவிகள், 25 ஆயிரத்து 888 தனித்தேர்வர்கள், 272 சிறைவாசிகள் என மொத்தம் 9 லட்சத்து 13 ஆயிரத்து 36 பேர் எழுத இருக்கிறார்கள்.

இதற்காக மாநிலம் முழுவதும் 4 ஆயிரத்து 113 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. தேர்வு அறை கண்காணிப்பாளர் பணியில் 48 ஆயிரத்து 426 பேரும், தேர்வு கண்காணிக்கும் பணியில் 4 ஆயிரத்து 858 பேரும் ஈடுபடுத்தப்பட உள்ளனர். முதல் நாளான இன்று தமிழ் மற்றும் இதர மொழிப் பாடங்களுக்கான தேர்வு நடக்கிறது.

காலை 10 மணிக்கு தொடங்கும் இந்த தேர்வு பிற்பகல் 1.15 மணி வரை நடைபெற உள்ளது. தேர்வின் முதல் 10 நிமிடம் வினாத் தாளை வாசிப்பதற்கும், அடுத்த 5 நிமிடம் சுய விவரங்களை விடைத்தாளில் பதிவு செய்வதற்கும், 10.15 மணி முதல் 1.15 மணி வரை தேர்வு எழுதுவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் காப்பி அடித்தல், துண்டு சீட்டு வைத்து எழுதுதல், விடைத்தாள் மாற்றம் செய்தல் போன்ற ஒழுங்கீன செயல்களில் ஈடுபட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்வுத்துறை எச்சரித்துள்ளது. மேலும், தேர்வு பணிகளில் ஈடுபடக்கூடிய ஆசிரியர்கள் செல்போன் பயன்படுத்துதல், மாணவர்கள் பார்த்து எழுதுவதற்கு உதவுதல் போன்ற தவறான செயல்களுக்கு துணை போகக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

10-ம் வகுப்பு பொதுத்தேர்வுக்கு மாணவர்கள் தயாராகும் வகையில், ஒவ்வொரு தேர்வுக்கும் 2, 3 நாட்கள் இடைவெளி உள்ளது. ஏப்ரல் 15-ந் தேதி வரை தேர்வு நடக்கிறது. தேர்வு முடிவு மே 19-ந் தேதி வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை கடற்படை அட்டூழியம்: 11 ராமேசுவரம் மீனவர்கள் கைது

ராமேசுவரம், மார்ச் 28-

**ராமேசுவரம் மீனவர்கள் 11 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்துள்ளனர்.**

தமிழகம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் சம்பவம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அதோடு மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இந்த நிலையில், ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர்கள், மீன்பிடி துறைமுகத்தில் இருந்து உரிய அனுமதிச் சீட்டு பெற்று விசைப்படகுகளில் வழக்கம்போல் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அதன்படி மீனவர்கள் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி மீனவர்கள் 11 பேரை கைது செய்தனர். அதோடு ஒரு விசைப்படகையும் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன் துறைமுகத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். மீனவர்கள் 11 பேர் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவம் சக மீனவர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் உடனடியாக அவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளனர்.

## மார்க்கெட் விலை நிலவரம்




BSE ↑ 317.93 பாயின்ட் 77,606.43

NSE ↑ 105.10 பாயின்ட் 23,591.95



**தங்கம்**
1 சவரன் ₹ 65,880
1 கிராம் ₹ 8,235



**வெள்ளி**
1 கிலோ ₹ 111,000
1 கிராம் ₹ 111.00

**டாலர்** ₹ 85.71

**பெட்ரோல்** ₹ 100.75
**டீசல்** ₹ 92.34



# இறக்குமதி வாகனங்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும்

## அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மார்ச் 28-**

அமெரிக்காவில் இறக்குமதி வாகனங்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டு கார்கள் மற்றும் அதன் உதிரிபாகங்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். இந்த புதிய உத்தரவு ஏப்ரல் 3, முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளை மாளிகையில் பேசிய டிரம்ப் இது தொடர்பாக கூறுகையில் "அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படாத எல்லா கார்களுக்கும் இந்த 25 சதவீதம் வரி பொருந்தும் என்று கூறினார்.



டிரம்பின் இந்த முடிவு அமெரிக்க உள்நாட்டு வாகனத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், உள்ளூர் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காகவும் எடுக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை விளக்கமளித்துள்ளது. டிரம்பின் இந்த உத்தரவால், கனடா, மெக்ஸிகோ, ஜப்பான், தென் கொரியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதியாகும் கார்கள் இந்த வரி உயர்வால் நேரடியாக பாதிக்கப்படும். இதனால், அந்த நிறுவன கார்களின் விலை உயரக்கூடும்.

# பகுதி நேர ரேசன் கடைகள்: சட்டசபையில் அமைச்சர் தகவல்

**சென்னை, மார்ச் 28-**

தமிழக எம்.எல்.ஏ.க்களுக்கு வழங்கப்படும் நிதியை கொண்டு பகுதி நேர ரேசன் கடையை திறக்கலாம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, எம்.எல்.ஏ. நாகை மாலி, எம்.எல்.ஏ. மேம்பாட்டு நிதியில் பகுதி நேர ரேசன் கடை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன், 100 நாள் வேலை திட்ட நிதியை முழு நேர கடைகளுக்கு மட்டுமே பயன்படுத்தலாம். பகுதி நேர கடைகளுக்கு பயன்படுத்த முடியாது. ஆனால், எம்.எல்.ஏ. மேம்பாட்டு நிதியை பகுதி நேர ரேசன் கடைகள் கட்ட பயன்படுத்தலாம்'' என்று தெரிவித்தார்.

## வங்கதேச தேசிய தினம்:

# முகமது யூனுஸுக்கு பிரதமர் மோடி கடிதம்

**புதுடெல்லி, மார்ச் 28-**

இந்தியா - வங்கதேசம் இடையேயான பகிரப்பட்ட வரலாற்றுக்கும், தியாகத்துக்கும் வங்கதேச தேசிய தினம் சான்றாக இருக்கிறது என அந்நாட்டின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வங்கதேச தேசிய தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி, பேராசிரியர் முகமது யூனுஸுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், "இந்த நாள் நமது இருதரப்பு கூட்டாண்மைக்கு அடித்தளமிட்ட நமது பகிரப்பட்ட வரலாறு மற்றும் தியாகங்களுக்கு ஒரு சான்றாக நிற்கிறது. ஒருவரின் நலன் மற்றும் கவலைகளை மற்றொருவர் பரஸ்பரம் உள்வாங்கிக் கொண்டு உணர்வுடன் செயல்படுவதன் மூலம், அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தவும் அதன் அடிப்படையில் கூட்டாண்மையை கொண்டு செல்லவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.'' என்று தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தின் விடுதலைக்காக பாகிஸ்தானுக்கு எதிராக போரிட்டு வெற்றி பெற்ற இந்தியா, மார்ச் 26-ம் தேதியை வெற்றி தினமாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்தியாவால் விடுதலைப் பெற்ற நாடு என்பதால், வங்கதேசம் இந்தியாவுடன் நல்லுறவைக் கொண்டிருந்தது. அந்நாட்டின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, தற்போது இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். அந்நாட்டின் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகராக முகமது யூனுஸ் பொறுப்பேற்றார்.

இதையடுத்து, வங்கதேசத்தில் உள்ள சிறுபான்மை இந்துக்களுக்கு எதிராக பெரும்பான்மை முஸ்லிம்கள் நடத்திய தாக்குதல்களுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்தது. மேலும், வங்கதேசத்தில் வாழும் இந்து சிறுபான்மையினரின் நிலை குறித்து இந்தியத் தலைவர்கள் தொடர்ந்து கவலை தெரிவித்து வருகின்றனர். இதனால், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு சீராக இல்லை.

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு: 3 குழந்தைகள் உள்பட 4 பேர் பலி

**ப்ளோரிடா, மார்ச் 28-**

அமெரிக்காவின் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

தெற்கு ப்ளோரிடா நகரத்தின் பெம்ப்ரோக் பார்க் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 3 குழந்தைகள் மற்றும் ஒரு பெண் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்களைப் பற்றிய தகவல்கள் எதுவும் தற்போது வரை தெரிவிக்கப்படாத நிலையில் படுகாயமடைந்த ஒரு சிறுமி மற்றும் ஒரு ஆண் ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து பெம்ப்ரோக் பார்க் காவல் துறையின் செய்தி தொடர்பாளர் இவான் ராஸ் கூறுகையில், இந்த தாக்குதல் உள்ளூர் நபர்களினால் நடத்தப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பப்புவா நியூ கினியாவில் பேஸ்புக்கிற்கு திடீர் தடை

**போர்ட்மோர்ஸ்பி,மார்ச் 28-**

பேஸ்புக் மூலமாக போலி செய்திகள் பரப்புவதால் பப்புவா நியூக்கில் திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா அருகே பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவு நாடாக பப்புவா நியூ கினியா உள்ளது. சுமார் 20 லட்சம் மக்கள் வசிக்கும் இந்த நாடு சுற்றுலா தலங்களுக்கு பெயர் போனது. இங்குள்ள பொதுமக்கள் பிரபல சமூக வலைத்தளமான பேஸ்புக்கை அதிகளவில் பயன்படுத்தி வருகிறார்கள். சுமார் 13 லட்சம் பேர் பேஸ்புக்கில் கணக்கு தொடங்கி பயன்படுத்தி வந்துள்ளனர். இந்த நிலையில் பேஸ்புக் மூலமாக போலி செய்திகள், மற்றும் ஆபாச படங்கள் அதிகளவில் பரப்பப்படுவதாக புகார்கள் எழுந்தன. இதனால் பேஸ்புக்கிற்கு தடை விதிக்கப்படும் என தகவல் வெளியாகி வந்தது.

இந்த நிலையில் பப்புவா நியூ கினியாவில் பேஸ்புக்குக்கு திடீரென தடை விதிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் பேஸ்புக்கை பயன்படுத்த முடியாமல் சிரமம் அடைந்தனர். இது மக்களின் கருத்து சுதந்திரத்தையும், பேச்சுரிமையையும் பறிப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

# இரவிபுதூர்கடை-கருங்கல் சாலை விரிவுபடுத்தப்படும்: அமைச்சர்

**சென்னை, மார்ச் 28-**

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, இரவிபுதூர்கடை முதல் கருங்கல் சாலை விரிவு படுத்தப்படுமா என்று குளச்சல் எம்.எல்.ஏ. பிரின்ஸ் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்து பேசிய நெடுஞ் சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, 5.5 கி.மீ. தூரம் சாலை விரிவுபடுத்தப்பட்டுள்ளது, மீதமுள்ள 2 கி.மீ. தூரம் நிலம் கையக்கப்படுத்தப்பட்ட பின் சாலை பணிகள் விரைவில் தொடங்கும் என்று தெரிவித்தார்.

அதேபோல் விக்கிரவாண்டி முதல் கும்பகோணம் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலை பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதில் அளித்த அமைச்சர் எ.வ.வேலு, நீண்ட காலமாக இந்தப் பணிகள் நடந்து வருகிறது. தற்போது டெண்டர் விடப்பட்டு ஒரு நிறுவனம் அதை எடுத்துள்ளது. எனவே இந்த சாலைப்பணிகளை விரைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தெரிவித்தார்.

# உதயநிதி சட்டசபைக்கு வராதது ஏன்? முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்

**சென்னை, மார்ச் 28-**

உதயநிதி ஸ்டாலின் சட்டசபைக்கு வராதது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

சட்டசபையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துறையான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை-சிறப்பு திட்ட செயலாக்கத் துறை மானிய கோரிக்கையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார். அப்போது உதயநிதி ஸ்டாலின் சட்டசபைக்கு வராதது குறித்து முதல்வர் ஸ்டாலின் விளக்கம் அளித்தார். அவர் கூறியதாவது:-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (நேற்று முன்தினம்) உடல்நலக்குறைவுடன் பேரவைக்கு வந்திருந்தார்.

இன்று (நேற்று) கடுமையான உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவர்கள் கட்டாயம் ஓய்வு எடுக்க அறிவுரை வழங்கியுள்ளனர். எனவே, நான் மானியக் கோரிக்கையை முன் வைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

# பாக். சிறையில் இந்திய மீனவர் தற்கொலை

**பாகிஸ்தான், மார்ச் 28-**

பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்ட இந்திய மீனவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எல்லை தாண்டிச் சென்று பாகிஸ்தான் கடல் பகுதியில் மீன் பிடித்ததாகக் கூறி இந்திய மீனவர் கௌரவ் ராம் ஆனந்த் (52) கடந்த 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாகிஸ்தான் ராணுவத்தால் கைது செய்யப்பட்டார். பாகிஸ்தான் கராச்சி சிறையில் 3 ஆண்டுகளாக தண்டனை அனுபவித்து வரும் இவர் நேற்றுமுன்தினம் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது. சிறையில் உடன் இருக்கும் நண்பர் வெளியே சென்ற நேரத்தில் நள்ளிரவில் அவர் தற்கொலை செய்துகொண்டதாக சிறை அதிகாரி தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன் குஜராத்தைச் சேர்ந்த பாபு பாய் சுடாசாமா என்ற மீனவர் பாகிஸ்தான் சிறையில் தண்டனைக் காலம் முடிந்து அடைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உடல்நலக் கோளாறால் பலியானார். இதுபோல, இந்திய மீனவர்கள் பலர் பாகிஸ்தான் சிறையில் பலியாகும் சம்பவம் அடிக்கடி நடைபெறுகிறது. இந்திய அரசு கொடுத்த தகவலின்படி, கடந்த டிசம்பர் 31, 2024 வரை பாகிஸ்தான் சிறையில் 144 இந்திய மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும், 1,173 படகுகள் அவர்களால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள. இதில் குஜராத் மீனவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். தெளிவாக வரையறுக்கப்பட்ட கடல் எல்லைகள் இல்லாதது, நவீன வழிகாட்டும் கருவிகளின் போதாமை, தவறுதலாக எல்லை தாண்டிச் செல்வது உள்ளிட்ட காரணங்களால் மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

# பதவியில் இருந்து விலகிக் கொள்வது தான் இ .பி.எஸ்.க்கு மரியாதை: ஓ.பன்னீர்செல்வம்

**சென்னை, மார்ச் 28-**

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவியில் இருந்து எடப்பாடி பழனிசாமி விலகிக் கொள்வது தான் எடப்பாடி பழனிசாமிக்கு மரியாதையாக இருக்கும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசுகையில், "ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை கட்சியில் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை. கோவிலாக கருதும் அ.தி.மு.க. அலுவலகத்தை ரவுடிகள் மூலம் தாக்கிய ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இணைக்க முடியாது. ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரிடம் இருந்து பிரிந்தது பிரிந்ததுதான். தி.மு.க.வை தவிர மற்ற எந்த கட்சியும் அ.தி.மு.க.வுக்கு எதிரி இல்லை. ஒருமித்த கருத்துடைய கட்சிகளுடன் தேர்தலில் கூட்டணி வைப்போம்'' என்று அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், "தமிழகத்தில் அ.தி.மு.க. எந்த காலத்திலும் வெற்றி பெறக் கூடாது என்ற நோக்கத்தில் எடப்பாடி பழனிசாமி செயல்படுகிறார். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவியில் இருந்து எடப்பாடி பழனிசாமி விலகிக் கொள்வது தான் அவருக்கு மரியாதையாக இருக்கும். இல்லை என்றால் அவமரியாதையை சந்திப்பார்.

ஒற்றைத் தலைமை வந்தால் அனைத்து தேர்தலிலும் வெற்றி பெற முடியும் என்று, ஆள் வைத்து பேசினார்கள். ஆனால் இதுவரை நடந்த ஒரு தேர்தலில் கூட வெற்றி பெறவில்லை. அ.தி.மு.க.வில் நான் இணைய வேண்டுமென்று கூறவில்லை. பிரிந்த சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்தால் தான் அ.தி.மு.க. வெற்றி பெறும் சூழல் உருவாகும் என கூறுகிறேன்'' என்று அவர் தெரிவித்தார்.

# இஸ்ரேலின் தாக்குதலில் பாலஸ்தீனர்கள் 6 பேர் பலி

**காஸா, மார்ச் 28-**

காஸாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் பலியாகினர்.

வடக்கு காஸாவின் ஜபாலியா பகுதியில் அப்தெல்-லத்தீஃப் அல்-குவானோவா என்பவர் தங்கியிருந்த முகாமின் மீது இஸ்ரேல் ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் அவர் பலியானதாக ஹமாஸ் கிளர்ச்சிப்படையின் செய்தி தொடர்பாளர் பஸெம் நயிம் தெரிவித்துள்ளார். இதேபோல், காஸா பகுதியின் மீதான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் என மொத்தம் 6 பேர் பலியானதாக காஸாவின் சுகாதாரத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

முன்னதாக, கடந்த வாரம் ஹமாஸுடனான போர் நிறுத்த ஒப்பந்ததை முறித்து இஸ்ரேல் ராணுவம் காஸாவின் மீது நடத்திய திடீர் தாக்குதலில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஹமாஸ் படையிடம் மீதமுள்ள பிணைக் கைதிகளை விடுவிக்கப்படவில்லை என்றால் இந்தத் தாக்குதலானது மேலும் அதிகரிக்கக் கூடும் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது. இருப்பினும், ஹமாஸ் தரப்பில் தங்களிடம் மீதமுள்ள 59 பிணைக் கைதிகள் இஸ்ரேல் படைகள் காஸாவை விட்டு வெளியேறி போர் நிறுத்தம் நீடித்தால் மட்டுமே விடுவிக்கப்படுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும், அதில் 24 பேர் மட்டுமே தற்போது உயிரோடு இருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகின்றது.

**28-03-2025**




**மேஷம்:-** தாய், மனைவி, சகோதரி போன்ற அன்புமிக்க பெண்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நல்ல வாகன யோகம் உண்டு. அரசுப் பணிகளில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**ரிஷபம்:-** இன்று, தன்னம்பிக்கை அதிகரிக்கும். முன்னேற்ற வாய்ப்புகள் தேடி வரும். அரசு ஆதரவும், அனைத்துக் காரியங்களும் வெற்றியில் முடியும். அறிவு விருத்தியும், புத்தி தெளிவும் ஏற்படும்.

**மிதுனம்:-** ஆரோக்கியம் மேம்படுவதோடு, குழந்தை பாக்கியம் ஏற்படும். புகழும், கௌரவமும் ஓங்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவார். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு.

**கடகம்:-** நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நினைத்தபடி எதுவும் நடக்காது. திடீர் நடுக்கம். பயம் ஏற்படும். எதிலும் நிதானமாக நடக்க வேண்டிய சந்திராஷ்டம நாள். எச்சரிக்கை தேவை.

**சிம்மம்:-** இன்று, பேச்சுத் திறமையால் மிகப் பெரிய காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். அரசு வழியில் அதிகாரிகள் உதவியால் ஆதாயம் அடைவார். புது புது ஆடைகள் கிடைக்கும். மனைவியால் நன்மையும் அடைவர்.

**கன்னி:-** பயணத்தில் பலவித நன்மைகள் ஏற்படும். பல வழிகளிலும் தனவரவு உண்டு. அதன் காரணமாக ஆனந்தம் பொங்கும். சிலர் வீடு வாங்கும் எண்ணத்தில் கடனுக்கு முயற்சி செய்வர். புதிய நட்பு கிடைக்கும்.

**துலாம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். மனதில் உறுதியும், புதிய உற்சாகமும் உண்டாகும். பகைவர்கள் விலகி ஓடுவர். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் குழந்தைகள் மீது பாசம் பெருகும்.

**விருச்சிகம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். எதிர்பார்த்த தனவரவு ஏற்படும், இனிய தூக்கமும் குறையும்.

**தனுசு:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள். தனவரவும், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும். வாகன சுகம் குறையும்.

**மகரம்:-** சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய நாள். படிப்பில் கவனம் இருந்தால் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பணியில் அலட்சியப் போக்குகள் அல்லல் தரலாம்.

**கும்பம்:-** பெரியோர் மீது அன்பும், பாசமும் பெருகும். நல்ல புதிய வாகன யோகம் உண்டு. அரசுப் பணியில் உள்ளவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். வியாபாரத்தில் ஏற்படும் பணவரவால் மனத் திருப்தி உண்டாகும்.

**மீனம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடுவது நல்லது.

# அமித்ஷாவுக்கு எதிராக உரிமை மீறல் நோட்டீஸ்: ஜக்தீப் தன்கர் நிராகரிப்பு

**புதுடெல்லி, மார்ச் 28-**

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு எதிராக காங்கிரஸ் கொண்டு வந்த உரிமை மீறல் நோட்டீஸ் மாநிலங்களவைத் தலைவர் ஜக்தீப் தன்கரால் நிராகரிக்கப்பட்டது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், பிரதமரின் தேசிய நிவாரண நிதி நிர்வாகத்தில் காங்கிரஸ் தலைவர் சேர்க்கப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவருக்கு எதிராக காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் உரிமை மீறல் நோட்டீஸை தாக்கல் செய்தார்.

அதில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு எதிராக அவதூறு பரப்பும் நோக்கில் உண்மையற்ற தகவலை அமித் ஷா கூறியதாகவும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாநிலங்களவைத் தலைவர் ஜக்தீப் தன்கரிடம் கோரிக்கை வைத்தார்.

இந்த விவகாரம் குறித்து நேற்று பேசிய ஜக்தீப் தன்கர், "தான் பேசியதற்கான ஆதாரத்தை அமித் ஷா அளித்திருக்கிறார். 1948ம் ஆண்டு, பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆட்சிக் காலத்தின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பில், பிரதமரின் தேசிய நிவாரண நிதி நிர்வாகத்தில் பிரதமர், காங்கிரஸ் தலைவர், வேறு சிலர் இடம் பெறுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான செய்தி அறிக்கை மத்திய அரசின் பத்திரிகை தகவல் தொடர்பு முகமை மூலம் வெளியிடப்பட்டுள்ளது. நான் அதை கவனமாகப் பரிசோதித்தேன். எந்த மீறலும் நடக்கவில்லை என்று நான் காண்கிறேன்.'' என்று தெரிவித்துள்ளார். மேலும், இந்த அடிப்படையில் உரிமை மீறல் நோட்டீஸ் நிராகரிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். அதற்கு காங்கிரஸ் எம்பிக்கள் சிலர், அதில் கூறப்படும் ஆண்டு 1948, தற்போது 2025 என்று கூறி கோஷமிட்டனர்.

# 2027-ல் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும்

## சர்வதேச நிதி நாணயம் தகவல்

**புதுடெல்லி, மார்ச் 28-**

2027ம் ஆண்டு உலகின் 3வது பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும் என்று சர்வதேச நிதி நாணயம் தெரிவித்துள்ளது.

உலகின் 5-வது பெரிய பொருளாதாரமாக இருக்கும் இந்தியா, கடந்த 10 ஆண்டு கால பொருளாதாரத்தில் 105 சதவிகித வளர்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தரவறிக்கையில் கூறப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 2015-ம் ஆண்டில் 2.1 டிரில்லியன் டாலராக இருந்த நிலையில், தற்போது இருமடங்காக அதிகரித்து 2025-ல் 4.3 டிரில்லியன் டாலர் என்ற நிலையை அடைந்துள்ளது.

தற்போது, ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரிதளவிலான மாற்றம் இல்லாததால், 2024 25 நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில், ஜப்பானை பின்னுக்கு தள்ளி உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாறும் வாய்ப்புகளும் உள்ளன. 2027ம் ஆண்டு ஜெர்மனியை பின்னுக்கு தள்ளி உலகின் 3வது பெரிய பொருளாதாரமாகவும் உருவெடுக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அமெரிக்கா 30.3 டிரில்லியன் டாலர்களுடன் முதலிடத்திலும், சீனா 19.5 டிரில்லியன் டாலர்களுடனும் உள்ளன. தற்போதைய வேகத்தில் ஒவ்வோர் ஒன்றரை வருடங்களுக்கும் இந்தியா, தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 டிரில்லியன் டாலர்களை சேர்க்க முடியும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். இந்த வேகம் தொடர்ந்தால், 2032 ஆம் ஆண்டின் இறுதிக்குள், நாடு 10 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கோவையில் மூதாட்டி கூட்டு பலாத்காரம்: 3 வடமாநில தொழிலாளர்கள் கைது

**கோவை, மார்ச் 28-**

கோவையில் மூதாட்டி கூட்டு பாலியல் பலாத்காரம் செய்த 3 வடமாநில தொழிலாளர்களை போலீசார் கைது செய்தனர்.

கோவை அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 65 வயது மூதாட்டி. தனியாக வசித்து வரும் இவர், கூலி வேலை செய்து பிழைப்பு நடத்துகிறார். இந்த மூதாட்டியின் வீடு அருகே கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளில் வடமாநிலத்தை சேர்ந்த தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் அதிகாலையில் மூதாட்டி வீட்டில் இருந்தார். அப்போது அங்கு வந்த 3 வடமாநில தொழிலாளர்கள் திடீரென அவரை தாக்கி கீழே தள்ளினர்.

பின்னர் மூதாட்டி என்றும் பாராமல் அவரை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த மூதாட்டி கதறி துடித்தார். சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்தனர்.

உடனே அந்த வடமாநில தொழிலாளர்கள் தப்பி ஓட முயன்றனர். அவர்களை சுற்றி வளைத்து அக்கம்பக்கத்தினர் பிடித்தனர். ஆனாலும் ஒருவர் தப்பி ஓடினார். மீதமுள்ள 2 பேரை பிடித்து கோவில்பாளையம் போலீசில் ஒப்படைத்தனர். பின்னர் 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

அத்துடன் தப்பி ஓடிய நபரையும் போலீசார் தேடிப் பிடித்து கைது செய்தனர். அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. பாலியல் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட மூதாட்டிக்கு கோவை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஓ.பன்னீர்செல்வத்தை மீண்டும் கட்சியில் சேர்க்க முடியாது: இ.பி.எஸ். திட்டவட்டம்



**தூத்துக்குடி, மார்ச் 28-**

ஓ.பி.எஸ் உள்ளிட்டோரை அ.தி.மு.க.வில் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை கட்சியில் சேர்க்கும் பேச்சுக்கே இடமில்லை. கோவிலாக கருதும் அ.தி.மு.க. அலுவலகத்தை ரவுடிகள் மூலம் தாக்கிய ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இணைக்க முடியாது. ஓ.பன்னீர்செல்வம் அ.தி.மு.க.வில் இருக்கவே தகுதியற்றவர். பிரிந்தவர்களை மீண்டும் கட்சியில் இணைப்பது சாத்தியமில்லை. ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரிடம் இருந்து பிரிந்தது பிரிந்ததுதான். அ.தி.மு.க.வை ஒருபோதும் எதிரிகளிடம் அடமானம் வைக்க மாட்டோம்.

இலங்கை கடற்படை தமிழக மீனவர்களை தாக்குவது, படகுகளை சேதப்படுத்துவது கண்டனத்திற்குரியது. நாங்கள் ஆளுங்கட்சி அல்ல. ஆட்சியில் இல்லாதபோது உருட்டல், மிரட்டல் எல்லாம் எங்களை எதுவும் செய்ய முடியாது. தி.மு.க.வை தவிர மற்ற எந்த கட்சியும் அ.தி.மு.க.வுக்கு எதிரி இல்லை. ஒருமித்த கருத்துடைய கட்சிகளுடன் தேர்தலில் கூட்டணி வைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி சட்டசபையில் 16-வது முறை தீர்மானம்

**புதுச்சேரி, மார்ச் 28-**

யூனியன் பிரதேசமாக உள்ள புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி சட்டமன்றத்தில் 16-வது முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யூனியன் பிரதேசமாக உள்ள புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி சட்டமன்றத்தில் 16-வது முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களின் விவாதத்திற்கு பிறகு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றியது புதுச்சேரி அரசு. புதுச்சேரிக்கு உடனே நிர்வாக விடுதலை வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சிவா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் சிவா, திமுக, காங்கிரஸ் உறுப்பினர்கள் தனிநபர் தீர்மானங்களை கொண்டு வந்தனர். நிர்வாக அதிகாரம் இல்லாமல் நிதிச்சுமையில் புதுச்சேரி சிக்கி இருக்கிறது என்று எதிர்க்கட்சி தலைவர் சிவா கூறினார். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமா மத்திய அரசு என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.

## தலைவர் விஜய் தலைமையில் சென்னையில்

# இன்று த.வெ.க. கட்சியின் முதல் பொதுக்குழு கூட்டம்

**சென்னை, மார்ச் 28-**

தலைவர் விஜய் தலைமையில் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் பொதுக் குழு கூட்டம், இன்று சென்னை திருவான்மியூரில் நடக்க உள்ளது.

தமிழக வெற்றிக்கழகத்தின் முதல் அரசியல் பொதுக் குழு கூட்டம் இன்று திருவான்மியூரில் உள்ள ராமச்சந்திரா கன்வென்ஷன் அரங்கத்தில் நடைபெற இருக்கிறது. கட்சி தொடங்கி நடைபெறும் முதல் பொதுக்குழு கூட்டம் என்பதால் கூட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து கட்சி தலைவர் விஜய் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் நிர்வாகிகளுடன் தீவிர ஆலோசனை நடத்தினர்.

கூட்டத்துக்கு வரும் அனைவருக்கும் போதிய பாதுகாப்பு வசதி மற்றும் அடிப்படை வசதிகளை சிறப்பாக செய்து கொடுக்க விஜய் உத்தர விட்டுள்ளார். இதைத் தொடர்ந்து பொதுக் குழு கூட்டத்துக்கான ஏற்பாடுகளை கட்சி பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் விஜய் உத்தரவுபடி செய்து வருகிறார்.

பொதுக்குழு கூட்டத்தில் சுமார் 2,500 பேர் பங்கேற்க இருக்கின்றனர். மாவட்டத்திற்கு 15 பேர் கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு அனுப்பப்பட்டு உள்ளது. மாவட்ட செயலாளர், இணைச் செயலாளர், பொருளாளர், 2 துணைச் செயலாளர்கள் என 5 பேரும் 10 பொதுக்குழு உறுப்பினர்களும் பங்கேற்க இருக்கின்றனர். இதுதவிர ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஒரு பெண் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

கூட்டத்தில் பங்கேற்க வரும் அனைவருக்கும் கியூ.ஆர். கோர்டுடன் கூடிய டிஜிட்டல் அடையாள அட்டையை அந்தந்த மாவட்ட செயலாளர்களிடம் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் வழங்கினார்.

இதற்கான பணிகள் நடந்தது. கூட்ட அரங்குக்குள் செல்போன் கொண்டு வர தடை விதிக்கப்பட்டு உள்ளது. அடையாள அட்டை கொடுக்கப்பட்டவர்கள் அதில் உள்ள கியூ.ஆர். கோர்டை ஸ்கேன் செய்தால் மட்டுமே அரங்கிற்குள் செல்ல முடியும்.

கூட்ட அரங்கம் முற்றிலும் துபாய் பாதுகாப்பு குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. சுமார் 100-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட இருக்கின்றனர். பெண்களுக்கு என தனி இடவசதி மற்றும் அடிப்படை வசதி அரங்கத்தில் செய்யப்படுகிறது. கூட்டத்திற்கு வருவதற்கும், செல்வதற்கும் தனித்தனி நுழைவு வாயில்கள் பயன்படுத்தப்பட இருக்கிறது. கட்சி தலைவர் விஜய் செல்வதற்கென தனி வழி அமைக்கப்பட்டு உள்ளது. கூட்டத்தில் மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும் தமிழக மக்கள் பிரச்சனை பற்றியும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது.

பொதுக்குழு நடைபெறுவதை தொடர்ந்து கூட்டம் நடைபெறும் திருவான்மியூர் சுற்றுப்புற பகுதிகள் அனைத்தும் இப்போதே களை கட்ட தொடங்கி இருக்கிறது. சுவர் விளம்பரங்கள், பேனர்கள், ராட்சத வரவேற்பு பலூன்கள் என பல்வேறு ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது. தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் பொதுக்குழு கூட்டம் என்பதால் கூட்டத்தில் விஜய்யின் அரசியல் அதிரடி பேச்சு பற்றி மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது. மேலும் முதல் பொதுக்குழு கூட்டம் தமிழக வெற்றிக் கழக தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மத்தியில் மிகுந்த உற்சாகம் எழுந்து உள்ளது.

# தமிழ்நாட்டில் வானிலை முன்னறிவிப்பில் இந்தி மொழி சேர்க்கப்பட்டதால் பரபரப்பு

**சென்னை, மார்ச் 28-**

தமிழகத்தில் இருமொழிக்கொள்கை தொடர்பாக சர்ச்சையாகி வரும் நிலையில் தற்போது சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் இந்தி மொழியும் சேர்க்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

வழக்கமாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் மட்டுமே இடம்பெறும். தற்போது இந்தி மொழியும் சேர்க்கப்பட்டுள்ளது தமிழகத்தில் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய தலைவர் அமுதா கூறியிருப்பதாவது:- சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் இந்தி மொழியை சேர்க்க இந்திய வானிலை ஆய்வு மையம் அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். இந்திய வானிலை மைய அதிகாரிகள் அறிவுறுத்தலால், இந்த மாற்றங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்தியில் முன்னறிவிப்பு வெளியிட சென்னை மையத்தில் மொழிபெயர்ப்பாளரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே மும்மொழிக்கொள்கை மிகப்பெரிய சர்ச்சையாகி இருக்கும் சூழலில், தற்போது மத்திய அரசு சார்பில் இந்திமொழியை சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது தமிழர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# புதிய பூங்காக்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு: அமைச்சர்

**சென்னை, மார்ச் 28-**

புதிய பூங்காக்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையின் நேற்றைய கேள்வி-பதில் நேரத்தின்போது சட்டமன்ற உறுப்பினர் அசோக் குமார், கிருஷ்ணகிரி தொகுதியில் புதிதாக பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் கே.என். நேரு, புதிய பூங்கா அமைப்பதில் எந்த பிரச்சினையும் இல்லை. புதிய பூங்காக்களை அமைக்கத் தேவையான நிதியை முதல்-அமைச்சர் ஒதுக்கீடு செய்துள்ளார். எனவே இடம் இருந்தால் புதிய பூங்கா அமைக்க இந்த ஆண்டே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

## வக்பு திருத்த மசோதா தொடர்பாக

# தி.மு.க. - பா.ஜ.க. இடையே சட்டசபையில் காரசார விவாதம்

**சென்னை, மார்ச் 28-**

வக்பு சட்டத்திருத்தத்திற்கு எதிரான அரசின் தீர்மானம் தொடர்பாக தி.மு.க. - பா.ஜ.க. இடையே காரசார விவாதம் நடந்தது.

வக்பு திருத்த மசோதாவுக்கு எதிரான தீர்மானத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் கொண்டு வந்து முன்மொழிந்தார். தீர்மானத்தின் மீது விவாதம் நடத்தப்பட்டது. மத்திய அரசின் வக்பு வாரிய சட்டதிருத்த மசோதாவிற்கு எதிரான தனித்தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டசபையில் பா.ஜ.க. எம்.எல்.ஏ வானதி சீனிவாசன் பேசினார் .

அப்போது சட்டசபையில் காரசார விவாதம் நடைபெற்றது .

வானதி சீனிவாசன்: இஸ்லாமிய சமூகத்தோடு பிறப்படுத்தப்பட்ட மக்களும் பெண்களும் முன்வர வேண்டும் என்பதற்காகவே வக்பு வாரிய சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. நாடாளுமன்றக் கூட்டுக்குழுவில் மட்டுமல்ல நாடு முழுவதும் பயணித்து பல்வேறு சமூக மக்களின் கருத்துக்களை கேட்டறிந்த பின்பு தான் அந்த பரிந்துரை வழங்கப்பட்டது.

அமைச்சர் ரகுபதி - நாடு முழுவதும் பெயரளவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவிட்டு ஆட்சேபனைகளை ஏற்காமல், ஆதரவாளர்கள் அளித்த பரிந்துரைகள் மட்டுமே ஏற்கப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க. ஸ்டாலின்: கூட்டுக்குழு கூட்டத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லாவுக்கு பேச அனுமதி வழங்கவில்லை. ஆனால் இங்கு வானதி சீனிவாசன் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அங்கு எங்களை அவர்கள் அனுமதிக்கவில்லை

வானதி சீனிவாசன்: மத்திய அரசின் சட்டத்திருத்தத்திற்கு எதிராக முதல்வர் மு க ஸ்டாலின் முன்மொழிந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. வெளிநடப்பு செய்கிறது. என தெரிவித்தார். இதையடுத்து வக்பு வாரிய சட்டதிருத்த மசோதாவிற்கு எதிரான தனித்தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டசபையில் பா.ஜ.க. வெளிநடப்பு செய்தது

# உதகை அருகே புலி தாக்கி இளைஞர் பலி

**உதகை, மார்ச் 28-**

உதகை அருகே புலி தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நீலகிரி மாவட்டம் உதகை அருகே கவர்னர் சோலை வனப்பகுதியில் புலி தாக்கி தோடர் பழங்குடியின இளைஞர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. கவர்னர் சோலை பகுதியில் உள்ள கொல்லகோடு மந்தையைச் சேர்ந்தவர் கேந்தர் குட்டன். தோடர் பழங்குடியினத்தைச் சேர்ந்த இவர் எருமை வளர்ப்பு மற்றும் விவசாயம் செய்து வந்துள்ளார். நேற்றுமுன்தினம் வழக்கம்போல எருமைகளை மேய்க்கச் சென்ற கேந்தர் குட்டன் மாலையில் வீடு திரும்பவில்லை. இதையடுத்து அவரது உறவினர்கள் அவரை தேடியுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலையில் அவரது உடல் அருகிலுள்ள வனப்பகுதியில் ரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளது. அவர் புலி தாக்கி உயிரிழந்தது தெரிய வந்தது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த உறவினர்கள் இதுகுறித்து வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த வனத்துறையினர் இளைஞரின் உடலை கைப்பற்றினர். மேலும் புலி நடமாட்டத்தை கண்காணிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## தொகுதி மறுவரையறைக்கு எதிராக

# தெலுங்கானா சட்டசபையில் தீர்மானம்

**ஐதராபாத், மார்ச் 28-**

தொகுதி மறுவரையறைக்கு எதிராக தெலுங்கானா சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

மக்கள் தொகை அடைப்படையில் தொகுதி மறுசீரமைப்பை செய்யக்கூடாது என அம்மாநில முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி வலியுறுத்தி உள்ளார். இதுதொடர்பாக தெலுங்கானா அரசாங்கம் நிறைவேற்றி உள்ள தீர்மானத்தில் கூறியிருப்பதாவது:-

வரவிருக்கும் தொகுதி மறுசீரமைப்பு பணி, மாநிலங்களுடன் வெளிப்படையான ஆலோசனைகள் இல்லாமல் திட்டமிடப்பட்டுள்ள விதம் குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது. மத்திய அரசால் முன்னெடுக்கப்படும் மக்கள்தொகை கட்டுப்பாட்டுத் திட்டத்தை திறம்பட செயல்படுத்திய மாநிலங்கள், அதன் விளைவாக மக்கள்தொகைப் பங்கு குறைந்துள்ளதால், அவை தண்டிக்கப்படக்கூடாது, எனவே, மக்கள் தொகை தொகுதி மறுசீரமைப்பிற்கான ஒரே அளவுகோலாக இருக்கக்கூடாது.

மேலும், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை வலுப்படுத்தும் பொருட்டு, ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம், 2014 மற்றும் சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி, மாநில சட்டமன்றத்தில் உள்ள இடங்களின் எண்ணிக்கையை உடனடியாக 119 இலிருந்து 153 ஆக அதிகரிக்க வேண்டும் என்று சபை தீர்மானிக்கிறது. இதற்காக தேவையான அரசியலமைப்புத் திருத்தங்களை அறிமுகப்படுத்துமாறு இந்த சபை மத்திய அரசை வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீர தீர சூரன் 2 படத்தை வெளியிட டெல்லி உயர்நீதிமன்றம் அனுமதி

**டெல்லி, மார்ச் 28-**

வீர தீர சூரன் 2 படத்தை வெளியிட டெல்லி ஐகோர்ட் அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளது.

சித்தா பட இயக்குனர் எஸ்.யு.அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் ‘வீர தீர சூரன் 2’. இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் ‘காளி’ என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இப்படத்திற்கு ஜிவி பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் நேற்று வெளியாக இருந்த நிலையில் மும்பையை சேர்ந்த பி4யு என்ற நிறுவனம், வீர தீர சூரன் 2 படத்தின் மீது டெல்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தது. இதனால் டெல்லி ஐகோர்ட் படத்தை நேற்று வெளியிட இடைக்கால தடை விதித்துள்ளது.

அதாவது, படத்தின் தயாரிப்பு நிறுவனத்திற்கு பி4யு நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது. அதற்காக இப்படத்தின் டிஜிட்டல் உரிமத்தை அந்நிறுவனத்திற்கு தயாரிப்பாளர் கொடுத்துள்ளார். ஆனால் படத்தின் டிஜிட்டல் உரிமம் விற்கப்படாமலேயே படத்தை வெளியிடுவதால் படத்தை ஓ.டி.டி.யில் விற்க முடியவில்லை என்று பி4யு நிறுவனம் கூறியுள்ளது. இந்த வழக்கு நேற்று காலை விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் முடிவில், வீர தீர சூரன் படக்குழு உடனடியாக ரூ.7 கோடியை டெபாசிட் செய்ய வேண்டும். மேலும் படத்தின் ஓ.டி.டி உரிமம் விற்கப்படும் முன் ரிலீஸ் தேதியை வெளியிட்டதால், 48 மணி நேரத்திற்குள் அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்ய வேண்டும்” என டெல்லி ஐகோர்ட் உத்தரவிட்டிருந்தது. வீர தீர சூரன் திரைப்படத்தை வெளியிடுவதற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது தடையை மேலும் 4 வாரங்களுக்கு நீட்டித்து டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் விக்ரம் நடித்துள்ள வீர தீர சூரன் 2 திரைப்பட த்தை வெளியிட டெல்லி ஐ கோர்ட் அனுமதியளித்துள்ளது.

# திருப்பூர் குமரனுக்கு விரைவில் மணிமண்டபம் கட்ட நடவடிக்கை

## அமைச்சர் சாமிநாதன் தகவல்

**சென்னை, மார்ச் 28-**

திருப்பூர் குமரனுக்கு மணிமண்டபம் கடடுமான பணிகள் தொடங்கப்படும் என்று அமைச்சர் சாமிநாதன் தெரிவித்தார்.

தமிழக சட்டசபையின் நேற்றைய கேள்வி-பதில் நேரத்தின்போது சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் பிறந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரை தியாகம் செய்த திருப்பூர் குமரனின் பிறந்த ஊரில் மணிமண்டபம் அமைக்கப்படும் என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு விழாவில் அறிவித்தார்.

அந்த மணிமண்டபம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது? என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் சுவாமிநாதன், திருப்பூர் குமரன் பிறந்த ஊரான சென்னிமலையில் முதல்வரின் உத்தரவின் பேரில் துறையின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் தேர்வு செய்யப்பட்ட இடம் சென்னிமலையிலிருந்து தூரமாக இருந்தது. சென்னிமலை பகுதியில் வேண்டும் என பொதுமக்கள் கேட்டார்கள். எனவே அறநிலையத்துறை அமைச்சரிடத்தில் முதலமைச்சர் அதற்கான உத்தரவை பிறப்பித்து சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமான இடத்தில் வாடகை அடிப்படையில் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமான பணிகள் தொடங்கப்படும். என தெரிவித்துள்ளார்.

# அண்ணாமலை திடீர் டெல்லி பயணம்

**சென்னை, மார்ச் 28-**

அண்ணாமலை திடீர் டெல்லி பயணத்தால் தமிழக அரசியல் களத்தில் மீண்டும் பரபரப்பு தொற்றியுள்ளது.

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அதிமுக மீண்டும் இடம் பெற இருக்கிறது. டெல்லியில் மத்திய அமைச்சர் அமித்ஷாவை, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக குழு சந்தித்து பேசியதைத் தொடர்ந்து பா.ஜ.க. கூட்டணிக்கு அந்த கட்சி திரும்ப இருப்பது உறுதியாகி இருக்கிறது.

இந்த நிலையில் அதிமுக கூட்டணிக்கு வந்தால் தமது மாநில தலைவர் பதவியை ராஜினாமா செய்வேன் என முன்னர் அறிவித்திருந்த தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை நேற்று டெல்லி பயணம் மேற்கொள்வது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. தற்போதைய நிலையில் திமுக தலைமையில் வலிமையான கூட்டணி நீடிக்கிறது. எதிர்க்கட்சிகள் தரப்பில் அனைத்தும் தனித்தனியாக சிதறி நிற்கின்றன. இது ஆளும் திமுக கூட்டணிக்கு சாதகமாகவே பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் டெல்லி சென்ற அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் அதிமுக தலைவர்கள், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து பேசினர். இந்த சந்திப்பைத் தொடர்ந்து பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அதிமுக இடம் பெறுவது உறுதியாகி இருக்கிறது. டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, கூட்டணி என்பது தேர்தல் நேரத்தில் அமையக் கூடியது; எந்த ஒரு கூட்டணியும் நிரந்தரமாக இருப்பது இல்லை என்று மட்டும் தெரிவித்தார்;-

அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணியை எடப்பாடி பழனிசாமி மறுக்கவில்லை. தமிழகத்தில் அதிமுக தலைவர்களும், பா.ஜ.க. உடனான கூட்டணியை ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில் அதிமுக மீண்டும் கூட்டணிக்கு வருவது பற்றி தமிழக பா.ஜ.க. தலைவர்கள் கனத்த மவுனம் காக்கின்றனர். தமிழக சட்டசபையில் நேற்றுமுன்தினம் திமுக- அதிமுக இடையே இது தொடர்பாக விவாதம் நடந்த போதும் கூட, பா.ஜ.க. மவுனமாக இருந்தது.

தமிழக பா.ஜ.க. தலைவரான அண்ணாமலைதான், அ.தி.மு.க.வை மிக கடுமையாக விமர்சித்தவர்; பா.ஜ.க. கூட்டணிக்கு அதிமுக திரும்பினால், தமிழக மாநில தலைவர் பதவியை ராஜினாமா செய்வேன் எனவும் ஏற்கனவே அண்ணாமலை அறிவித்திருந்தார். இந்த நிலையில் நேற்று அண்ணாமலை டெல்லி புறப்பட்டுச் சென்றார். டெல்லியில் அமித்ஷா உள்ளிட்ட பா.ஜ.க. மூத்த தலைவர்களை சந்திக்கும் அண்ணாமலை, அதிமுகவுடனான கூட்டணிக்கு எதிர்ப்பு தெரிவிப்பாரா? அல்லது மேலிடக் கட்டளையை ஏற்று அதிமுகவை அரவணைப்பாரா? என்கிற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

# ஊரக உள்ளாட்சி மன்ற தேர்தல்: அமைச்சர் கே.என்.நேரு தகவல்

**சென்னை, மார்ச் 28-**

ஊரக உள்ளாட்சி மன்ற தேர்தல் குறித்து அமைச்சர் கே.என்.நேரு தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்றுமுன்தினம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கை மீது எம்.எல்.ஏ.க்கள் விவாதித்தபோது சிலர் ஊரக உள்ளாட்சி மன்ற தேர்தல் குறித்து கேள்வி எழுப்பினர். இதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நேரு அளித்த பதில் வருமாறு:-

தேர்தல் நடத்தக்கூடாது என்ற எண்ணம் இல்லை. தற்போது மாநகராட்சி, நகராட்சிகளுக்கு அருகேயுள்ள ஊராட்சி பகுதிகளை இணைப்பதற்கான பணிகள் நடைபெறுகின்றன. அதன் பிறகு சாதிவாரியான சுழற்சி புதிதாக ஏற்படுத்தப்பட வேண்டும். இன்னும் 9 மாவட்டங்களில் ஒரு ஆண்டு பதவி காலம் உள்ளது.

பல பெரிய ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் இரண்டாக பிரிக்க வேண்டும். இதுபோல் பல்வேறு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இது பற்றிய குழு உள்ளது. சிலர் இணைக்க வேண்டாம் என்று கருத்து கூறி வருகின்றனர்.

இறுதியில் கலெக்டரின் ஆலோசனை பெறப்பட்டு முடிவு செய்யப்படும். இரண்டு துறை அதிகாரிகளும் சேர்ந்து ஆலோசனை மேற்கொள்வார்கள். இது போன்ற காரணங்களுக்காகத் தான் காலதாமதம் ஆகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# ஆயிரம் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் பணியை தொடங்கியது தேர்வு வாரியம்

**சென்னை, மார்ச் 28-**

ஆயிரம் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் பணி தொடங்கப்பட்டுள்ளது என்று ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் தொடக்கக் கல்வித்துறையில் காலியாக உள்ள 1,768 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு ஜூலை 21ம் தேதி நடைபெற்றது. இந்தத் தேர்வுக்கு 26,510 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். அதனை தொடர்ந்து 1,768 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுடன், கூடுதலாக 1,000 இடங்கள் சேர்த்து மொத்தம் 2,768 இடங்கள் நிரப்பப்பட உள்ளதாக ஆசிரியர் தேர்வு வாரியம் ஜூலை 16ம் தேதி அறிவித்தது.

தற்போது, இட ஒதுக்கீடு வாரியாக 1,000 கூடுதல் இடங்கள் நிரப்பப்பட உள்ளதை குறிப்பிட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

காலியாக உள்ள ஆசிரியர்களுக்கான பணியிடங்களை நிரப்ப வேண்டும் என எதிர்கட்சிகள் அழுத்தம் கொடுத்த நிலையில் தற்போது இந்த பணியிடங்களை நிரப்புவதற்கான பணி தொடங்கிவிட்டது என்று தமிழக அரசின் ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு சாதகமாக பார்க்கப்படுகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகள் மட்டுமே இடம்பெறும். இரு மொழிக் கொள்கையை பின்பற்றும் தமிழ்நாட்டில் தற்போது உள்நோக்கத்தோடு வானிலை அறிக்கையில் இந்தியை திணித்துள்ளது மத்திய அரசு. இந்த செயல் மத்திய அரசின் ஆதிக்க உணர்வையே காட்டுகிறது.

**- செல்வப்பெருந்தகை**



இந்தியா - இலங்கை இடையிலான கடல் பரப்பின் அளவைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இரு தரப்பு மீனவர்களும் எல்லை தாண்டாமல் மீன் பிடிப்பது சாத்தியம் இல்லை என்பது தான் எதார்த்தம். தமிழக மீனவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இரு தரப்பு மீனவர்களுக்கு இடையே பேச்சு நடத்த வேண்டும்.

**- அன்புமணி**



விசைத்தறி உரிமையாளர்கள் மற்றும் ஜவுளித்துறையினர் அடங்கிய பேச்சுவார்த்தையை உடனடியாக ஏற்பாடு செய்து வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதோடு, கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களின் நியாயமான ஊதிய உயர்வு கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும்.

**- டி.டி.வி. தினகரன்**



ஆன்லைன் சூதாட்டத் தடை தொடர்பான வழக்கை விரைவாக விசாரணைக்கு கொண்டு வந்து ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக தடை பெறுவது சாத்தியமில்லை என்றால் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட சூதாட்டங்களை தடை செய்வதற்காக புதிய சட்டத்தை சட்டப்பேரவையில் நிறைவேற்ற வேண்டும்.

**- ராமதாஸ்**

### அருப்புக்கோட்டை

# ரமணாஸ் கல்லூரியில் மாணவிகளுக்கான கருத்தரங்கை கலெக்டர் தொடங்கி வைத்தார்



அருப்புக்கோட்டை,மார்ச் 28-

அருப்புக்கோட்டை ஸ்ரீ ரமணாஸ் பெண்கள் கல்லூரியில், மாவட்ட நிர்வாகம் மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இணைந்து பாதுகாப்பான சமூக வலைதள பயன்பாடு மற்றும் சைபர் குற்றங்களை தடுத்தல், நிதி மேலாண்மை, போட்டி தேர்வுகள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி குறித்து நடைபெற்ற கல்லூரி மாணவிகளுக்கான கருத்தரங்கு நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தொடங்கி வைத்தார். மாவட்ட கலெக்டர் பேசியதாவது:-

பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுடன் கூடிய அறிவுரை வழங்குதே இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். 18 வயதிற்கு பிறகு கிடைக்கும் உரிமையோடு, அதனையொட்டி பொறுப்புகளும், கடமைகளும் நம்மிடம் வந்து சேரும். இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் முகநூல், இணையதளங்களில் இருக்கக்கூடிய வாய்ப்புகள் பற்றி நாம் தெரிந்து கொள்வதை விட அதிகமாக நமது நேரத்தை வீணடிக்கின்றோம். மிக முக்கியமான வயதை எட்டக்கூடிய பருவம் இந்த கல்லூரி பருவம். நீங்கள் உங்களை யார் ஆட்சி செய்ய வேண்டும் என்ற அரசியல் தலைமையை தேர்ந்தெடுப்பதற்கான, தேர்தலில் வாக்களிக்கக் கூடிய வாக்காளர் உரிமையை பெறுகிறீர்கள்.

ஒரு இருசக்கர, நான்கு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்குரிய ஓட்டுன உரிமைத்தையும் பெறுவதற்கான வயது இந்த வயதுதான். 18 வயதில் தான் நீங்கள் உங்கள் வாழ்க்கையை துணையை முடிவு செய்வதற்கான குறைந்தபட்ச வயதாகும். மேலும், மதிப்பெண்கள் மிகவும் முக்கியம். ஆனால் அந்த மதிப்பெண்களோடு விழிப்புணர்வு பெறுவது தான் மிகவும் முக்கியம். தோற்றம், நடத்தை, தொழில் இந்த மூன்றும் தான் உங்களினுடைய மனதை, எதிர்காலத்தை, உணர்வுகளை மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காரணிகள்.

அதற்கு தான் இது போன்ற நிகழ்ச்சிகள் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தெரிவித்தார். முன்னதாக கருத்தரங்கில் ரமணாஸ் மகளிர் கல்லூரி செயலாளர் இளங்கோவன் வரவேற்று பேசினார். மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ராஜா சிறப்புரையாற்றினர். மாவட்ட சமூக நல அலுவலர் ஷீலா சுந்தரி, மகளிர் கல்லூரி முதல்வர் தில்லை நடராஜன் நன்றியுரை ஆற்றினார்.கல்லூரி முதல்வர்கள், கல்லூரி மாணவிகள் பெற்றோர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதுகுளத்தூர் அருகே

# கீரனூர் கிராமத்தில் பசும்பொன் தேவர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் பயிற்சி முகாம்



முதுகுளத்தூர், மார்ச் 28-

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே கீரனூர் கிராமத்தில் பசும்பொன் திரு உ.முத்துராமலிங்கத் தேவர் நினைவு கல்லூரி - நாட்டு நலப்பணித் திட்ட சார்பாக ஏழு நாள் சிறப்பு முகாம் துவக்க விழா நடைபெற்றது.

முதுகுளத்தூர் அருகே கீரனூர் கிராமத்தில் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் நினைவு கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் நடைபெற்றது பயிற்சி முகாம் 24.03.25 முதல் 30.03.25 வரை நடைபெறுகிறது முதல்வர் கோ.தர்மர் தலைமை வகித்தார், கிராமத் தலைவர் எஸ். சுப்பிரமணியன் என்.எஸ். எஸ். கொடியேற்றி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார், நாட்டு நலப்பணி திட்டம் ஒருங்கிணைப்பாளர் மாமல்லன் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக ஸ்ரீ பகவதி அறக்கட்டளையின் தலைவரும் போஷன் அபியான் திட்டத்தின் வட்டார ஒருங்கிணைப்பாளர் மு. வெள்ளைப்பாண்டியன் யூத் இந்தியா" என்ற தலைப்பில் மத்திய, மாநில அரசின் திட்டங்களையும், மாணவர்களின் சட்ட உரிமைகள் "என்ற தலைப்பில் பேசினார், இளம் தொழில் முனைவோர் பத்திரிக்கையாளர் எம். ஆர்.பி விக்னேஸ்வரன் இளம் தொழில் முனைவோர்கள் " ஸ்டாப் இந்தியா" என்ற தலைப்பில் உரையாற்றினார், சமூக ஆர்வலர் விஜயன் மக்கள் சேவையில் இளைஞர்கள் என்ற தலைப்பில் பேசினார், முகாமில் 150-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு ஊராட்சி அலுவலகம், அங்கன்வாடி மைய வளாகம்,கால்நடை மருத்துவமனை வளாகத்தினையும் சுத்தம் செய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.கஜேந்திரநாயகம் செய்திருந்தார் ரா.மேரிசுஜின் நன்றி கூறினார்.

# சேவுகம்பட்டி பேரூராட்சியில் மாதாந்திர வளர்ச்சிப் பணி கூட்டம்



வத்தலகுண்டு, மார்ச் 28-

திண்டுக்கல் மாவட்டம் சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம் எம்.வாடிப்பட்டியில் உள்ள பேரூராட்சி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா தங்கராஜன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் தெய்வ ராணி விஜயன் முன்னிலை வகித்தார். பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ் பாபு வரவேற்றார்.

இக்கூட்டத்தில் 15 வது நிதி ஆணைய நிபந்தனை மானியம் 3ம் தவணைத் திட்டத்தின் கீழ் ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் 3வது வார்டு பேரூராட்சி அலுவலகம், 8வது வார்டு பெருமாள் கோவில் தெரு, 7வது வார்டு வீரபத்திரன் தெரு உள்ளிட்ட பகுதிகளில் போர்வெல், மினி பம்ப் அமைத்தல், 9வது வார்டு சேவுகம்பட்டி மெயின் ரோட்டில் ரூ9லட்சம் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் அமைத்தால், 8-வது வார்டு வளம் மீட்பு பூங்காவில் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், ரூ2.53 லட்சம் மதிப்பீட்டில் மின்கலன் மூலம் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்தல் உள்ளிட்ட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் கவுன்சிலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். முடிவில் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

# கோடைகால நீச்சல் பயிற்சி முகாம்

சிவகங்கை, மார்ச் 28-

கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் நடைபெறும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சிவகங்கை மாவட்டத்தின் சார்பாக கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் வருகின்ற 1-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்க பகுதியில் நடைபெறவுள்ளது. நீச்சல் கற்றுக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் நடைபெறும் 12 நாட்கள் பயிற்சி முகாம் 5 கட்டங்களாக நடைபெறவுள்ளது. மேலும், நீச்சல் கற்றுக்கொள்ளும் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற வரும் சிறுவர்கள் குறைந்தபட்சம் 4 அடி (120 செ.மீ) உயரம் இருத்தல் வேண்டும். இப்பயிற்சி பெறுவதற்கு 12 நாட்களுக்கு ஒரு வேளை (1 மணி நேரம்) பயிற்சிக்கு ரூ.1,500 தொகை கட்டணம் ஆகும்.

இப்பயிற்சி முகாமானது, வருகிற 1-ந் தேதி முதல் 13, 15-ம் தேதி முதல் 27-ம் தேதி வரையும், 29-ம் தேதி முதல் அடுத்த மாதம் 11-ம் தேதி வரையும், 13-ம் தேதி முதல் 25-ம் தேதி வரையும், 27-ம் தேதி முதல் 8-ம் தேதி வரையும் என 5 கட்டங்களாக நடைபெறவுள்ளது. மேலும், தினசரி நீச்சல் கற்றுக்கொடுக்கும் பயிற்சி நேரமானது காலை வேளையில் 8 மணி முதல் 11 மணி வரையும் மாலையில் 2 மணி முதல் 3 மணி வரையும் 3 மணி முதல் 4, 5, மணி வரை ஆகும்.

மேலும், கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அரங்கத்தினை 04575 299293 என்ற தொலைபேசி எண்ணிலோ, மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் 74017 03503 என்ற அலைபேசி எண்ணிலோ, நீச்சல் பயிற்றுநர் அவர்களை 9786523704 என்ற அலைபேசி எண்ணிலோ அல்லது மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், திறந்த வெளி விளையாட்டு அரங்கம், மானாமதுரை ரோடு, சு.ஆ.ஆ கல்லூரி அருகில், சிவகங்கை-630 561 என்ற முகவரியிலோ தொடர்பு கொண்டு விபரங்களை பெறலாம் என மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

### கமுதி அருகே

# இலவச மருத்துவ முகாம்



கமுதி, மார்ச் 28-

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே இராமசாமிபட்டி கிராமத்தில் நம்மாழ்வார் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதனடிப்படையில் மாணவ, மாணவிகள், அரசு தொடக்கப்பள்ளியில் ஊர் பொதுமக்கள், விவசாயிகள் அனைவருக்கும் இலவச மருத்துவ முகாம் நடத்தினர். இதில் இராமசாமிபட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் தலைமை மருத்துவர் நிஹார் அஞ்சும் தலைமையில் மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு ஊர் பொதுமக்கள், மாணவ, மாணவிகள், முதியவர்கள் அனைவரும் சிகிச்சை அளித்தார்கள், பல்வேறு நோய்களுக்கு ஆலோசனைகள், மற்றும் மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது . பல்வேறு கிராமங்களிலிருந்து பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

# கருத்தரித்தலில் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு நடைப்பயணத்தை திருச்சி நோவா ஐவிஎஃப் கருத்தரித்தல் மையம் நடத்தியது

திருச்சி, மார்ச் 28-

கருத்தரித்தலில் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கருத்தரித்தலில் தாமதம் ஏற்பட்டால் மற்றும் பெண்கள் இருவரும் சரியான நேரத்தில் மருத்துவ உதவியை நாட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் நோவா ஐவிஎஃப்கருத்தரித்தல் மையம் விழிப்புணர்வு நடைப்பயணத்தை நடத்தியது. திருச்சி நோவா ஐவிஎஃப்கருத்தரித்தல் மையத்தில் இருந்து இந்த நடைபயணம் தொடங்கியது.

இந்த நடைபயணத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டு, கருத்தரித்தல் தாமதமாவதற்கான காரணங்கள் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்திச் சென்றனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக திருச்சி மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகள் துறையில் ஓய்வு பெற்ற இணை இயக்குனர் டாக்டர் மோகனசுந்தரம், தஞ்சாவூர் *Prist* பல்கலைக்கழக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பள்ளியின் முதல்வர் பேராசிரியர் எஸ் லில்லிபேட்டை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் 50 முதல் 60% ஆண்களிடையே பாதிப்புகள் இருப்பது அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார்.

குறிப்பாக, சில பெண்களுக்கு பாலிசிஸ்டிக் ஓவரி சென்றோம்.எண்டோமெட்ரியோசிஸ் (இடுப்பு பகுதியில் கருப்பைக்கு வெளியே கருப்பையின் புறணித்த ஒத்த திசுக்கள் வளர்வது, விடாய் காலங்களில் அதிக அளவிலான வலி ஏற்படுவது, சில நேரங்களில் எட்டுத்தன்மை ஏற்படுவது) ஆகிய காரணங்களை குறிப்பிடுகின்றனர்.

38 வயதிற்கும் அதிகமான சில பெண்கள் மட்டுமே மாதவிடாய் நிறுத்தம் மற்றும் கருமுட்டைகளின் எண்ணிக்கை குறைவு போன்ற ஏற்படுகின்றன. திருச்சியை பொறுத்தவரை பொதுவாகவே 24 முதல் 25 வயதுக்குள் திருமணம் செய்து கொள்வதாகவும், அவர்களுக்கு ஏற்படும் கருத்தரிக்காமல் இருக்கும் பாதிப்புகளை உடனுக்குடன் சரி செய்து கொள்ளாமல், தாமதப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வேலூரில் ரிவர் நிறவனத்தின் முதல் கடை திறப்பு

வேலூர், மார்ச் 28-

பெங்களூருவை தளமாகக் கொண்ட மின்னணு வாகனம் உற்பத்தி செய்யும் ஸ்டார்ட் அப் நிறுவனமான ரிவர், வேலூரில் தனது கடையைத் தொடங்கியது. இண்டீ ஸ்கூட்டர்கள், ஆக்செஸ்சரீஸ் மற்றும் அதைச்சார்ந்த வணிகப் பொருட்கள் அனைத்தையும் வாடிக்கையாளர்களுக்கு அழகாக காட்சிப்படுத்தும் வகையில் ரிவர் ஸ்டோர் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. 1900 சதுர அடி பரப்பளவில் சத்துவாச்சாரியில் அமைந்துள்ள இந்த ரிவர் ஸ்டோர், மகாலட்சுமி மோட்டார்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது. இந்தக் கடையில் 3848 சதுர அடி பரப்பளவில் முழுமையான வசதிகளுடன் கூடிய சேவை மையமும் உள்ளது.

இண்டீ-யின் விலை ரூ.1,42,999-ஆக (எக்ஸ்-ஷோரூம், வேலூர்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் கடைக்குச் சென்று டெஸ்ட் ட்ரைவ் செய்யலாம், வணிகப் பொருட்களை காணலாம் அல்லது புதிய இண்டீ-யை வாங்கலாம். வாடிக்கையாளர்கள் டெஸ்ட் ட்ரைவ்-க்கு முன்பதிவு செய்யவும், ஒரு புதிய இண்டீ-யை வாங்கவும் *www.rideriver.com* ஈ*http://www.rideriver.com*> என்ற இணையதளத்தை பார்வையிடலாம். ரிவர் ஸ்டோர் சத்துவாச்சாரி எண். 37/4, தென்றல் நகர், புதிய பைபாஸ் சாலை, காகிதப்பட்டறை, வேலூர், தமிழ்நாடு - 632004 இல் அமைந்துள்ளது.

# திண்டுக்கல் காசம்பட்டி கோயில் காடுகள் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவிப்பு

திண்டுக்கல், மார்ச் 28-

திண்டுக்கல் மாவட்டம் காசம்பட்டி (வீர கோவில்) கோயில் காடுகளை, பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:-

திண்டுக்கல் வனப்பகுதியில் அழகர்மலை காப்புக்காடுக்கு அருகில் அமைந்துள்ள காசம்பட்டியை உயிரிய பன்முகச் சட்டம் 2002-ன் கீழ் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவித்து, அரசிதழில் இதற்கான அறிவிப்பை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை வெளியிட்டுள்ளது. இது தமிழ்நாட்டில் அறிவிக்கப்படும் இரண்டாவது பல்லுயிர் பாரம்பரிய தலமாகும். இதன் அடையாளமாக வனம் மற்றும் கதர்த் துறை திண்டுக்கல் நேற்று 27.03.2025 தலைமைச் செயலகத்தில் காசம்பட்டி (வீர கோவில்) பல்லுயிர் பாரம்பரிய தலம் பற்றிய குறும்படத்தினை வெளியிட்டார். மதுரை மாவட்டத்தில் உள்ள அரிட்டாபட்டி, 2022 ஆம் ஆண்டில் முதல் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, ரெட்டியபட்டி பஞ்சாயத்து, காசம்பட்டி கிராமத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள வீர கோவில் ஒரு கோயில் காடுகள். 4.97 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் இந்த கோயில் காடுகள் இன்றும் காலத்தை வென்று நிலை கொண்டுள்ளது. இந்தக் காடுகளைச் சுற்றிலும் உள்ள பசுமையான மாந்தோப்புகள் இயற்கை அழகையும், வளத்தையும் மேலும் மெருகூட்டுகிறது. வன விலங்குகளைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையை எய்த உதவும் வகையில் ஒரு பாலமாக இது விளங்குகிறது. இதன் ஆன்மீக முக்கியத்துவத்திற்கு அப்பால், சுற்றுச்சூழலில், கோயில் காடுகள் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. இது பல்லுயிரியலைப் பாதுகாக்கிறது மற்றும் உள்ளூர் காலநிலையை ஒழுங்குபடுத்துகிறது. வீர கோவில் கோயில் காடுகளில் உள்ளூர் தெய்வமான "வீரணன்" குடிகொண்டுள்ளதால் உள்ளூர் மக்களால் போற்றிப் பாதுகாக்கப்படுகிறது.

இந்த காடுகள் பல்லுயிர் பன்முகத் தன்மையின் முக்கிய இடமாகும். இக்காடுகள் 48 தாவர இனங்கள், 22 புதர்கள், 21 கொடிகள் மற்றும் 29 மூலிகைகள் உட்பட தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் குறிப்பிடத்தக்க பல்லுயிர்களின் தாயகமாகும், இது காடுகளின் பாரம்பரிய செழுமைக்கு பங்களிக்கிறது. இப்பகுதியில் 12-க்கும் மேற்பட்ட பறவை இனங்கள், பல்வேறு சிறிய பாலூட்டிகள், ஊர்வன மற்றும் எண்ணற்ற பூச்சிகள் போன்ற அனைத்தும் இந்த பாதுகாக்கப்பட்ட சூழலில் செழித்து வளர்கின்றன. இது பாரம்பரிய பன்முகத் தன்மையின் கருவூலமாகவும் செயல்படுகிறது, சுற்றுச்சூழலின் மீள்தன்மை மற்றும் தழுவலுக்கு பங்களிக்கும் பல்வேறு வகையான தாவர இனங்கள் உள்ளன. இந்த மரபணு வளம் மகரந்தச் சேர்க்கையை ஊக்குவித்தல் மற்றும் மண் வளத்தை அதிகரிப்பதன் மூலம், மாந்தோப்புகள் உட்பட சுற்றியுள்ள விவசாய நிலங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் உள்ளது. இந்த பாரம்பரிய தலத்தின் செழுமையான பன்முகத் தன்மை, கலாசார முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் மதிப்புடன், காசம்பட்டி (வீர கோவில்) கோயில் காடுகள் பாதுகாப்பு மற்றும் நிலையான பாரம்பரியத்தின் முன்மாதிரியாக உள்ளது. மரபியல் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதில் அதன் முக்கியப் பங்கைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு காசம்பட்டி (வீர கோவில்) கோயில் காடுகளை 2002 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் பல்லுயிர் பாரம்பரிய தலமாக அறிவித்து, அதன் பாதுகாப்பை தலைமுறைகளுக்கும் உறுதி செய்துள்ளது.

# கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவில் அறநிலையத்துறை தலைவர் மீது கொலை வழக்கு

சிவகங்கை, மார்ச் 28-

கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவிலில் அறநிலையத்துறை தலைவர் மீது கொலை வழக்குப்பதிவு செய்யப்படடுள்ளது.

காளையார்கோவில், செங்குளிபட்டி கிராமத்தை சேர்ந்த காளிதாஸ் சுவாதி என்ற தம்பதியர் தற்போது சென்னையில் வசித்து வருகின்றர். கடந்த 22.03.2025 அன்று கொல்லங்குடி வெட்டுடையார் காளியம்மன் கோவில் 13-ம் நாள் மண்டகப்படிக்காக வந்துள்ளனர். ஆனால் இவர்களைவ விட்டுவிட்டு வேறொருவர்களை வைத்து மண்டகப்படி நடத்த கோவில் அறநிலையத்துறை தலைவர் கண்ணப்பன் முயற்சித்ததாகவும் அப்போது கேட்க சென்ற காளிதாஸ் சுவாதி தம்பதியறை இரும்பு ராடு மற்றும் கட்டைகள் கொண்டு தாக்கியதில் காளிதாசுக்கு காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டர்.

மேலும் இது தொடர்பாக காளிதாஸ் சுவாதி தம்பதியினர் கொடுத்த புகாரின் அடிப்படையில். இவர்களை இரும்பு ராடு மற்றும் கட்டைகளை கொண்டு தாக்கி ஆபாச வார்தைகளால் திட்டடிய கோவில் அறநிலையத்துறை தலைவர் கண்ணப்பன், சிதம்பரம் மகன் தமிருப்பதி, உடையார் மகன் இளையபெருமாள், கருப்பாயா மகன் லட்சுமணன், மல்லிகா மகன் அஜித், கருப்பையா மகன் காளிமுத்தன் ஆகிய 7 பேர் மீது வழக்குப் பதிவு செய்து காளையார்கோவில் சார்பு ஆய்வாளர் பன்னீர்செல்வம் விசாரனை நடத்தி வருகின்றார்.

# கப்பலூர் சுங்கச்சாவடியில் ஏப்ரல் 1-ம் தேதி முதல் டோல் கட்டண உயர்வு




திருமங்கலம், மார்ச் 28-

கப்பலூர் சுங்கச்சாவடியில் ஏப்ரல் 1-ம் தேதி முதல் டோல் கட்டண உயர்வு என்ற அறிவிப்பால் வாகன உரிமையாளர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.இதனால் அனைத்து தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள நான்கு வழிச்சாலையில் கப்பலூர் சுங்கச்சாவடி அமைந்துள்ளது. இந்நிலையில் வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு சுங்கச்சாவடிகளில் டோல் கட்டணம் உயர்த்தப்படும் என தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் அருகேயுள்ள கப்பலூர் சுங்கச்சாவடியிலும் வரும் 1ம் தேதி முதல் டோல் கட்டணம் கடுமையாக உயர்த்தப்படவுள்ளது. நாடு முழுவதும் உள்ள சுங்கசாவடிகளில் ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் கட்டணத்தை உயர்த்திக்கொள்ள தனியார் சுங்கச்சாவடி ஒப்பந்ததாரர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள கப்பலூர் உள்ளிட்ட பல்வேறு சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வுக்கான அறிவிப்புகள் வெளியாகி உள்ளது.

அதன்படி கப்பலூர் சுங்கச்சாவடியில் கார், ஜீப், வேன் மற்றும் இலகுரக வாகனங்கள் ஒருமுறை சுங்கச்சாவடியினை கடந்து செல்ல 105ரூபாயும், 24மணி நேர பயன்பாட்டிற்கு 155 ரூபாயும், 50தடவை பயன்பாட்டிற்கான மாத கட்டணம் ரூ.3480 ஆகவும் உயர்த்தப்படவுள்ளது.இலகுரக வணிக வாகனம் ஒரு முறை பயன்பாட்டிற்கு ரூ.170-ம் 24மணி நேர பயன்பாட்டிற்கு ரூ.255-ம், 50தடவை பயன்பாட்டிற்கான மாத கட்டணம் ரூ.5625 ஆகவும், 2 அச்சு கனரக வாகனம், பஸ்கள் ஒரு முறை பயன்பாட்டிற்கு ரூ.355, 24 மணி நேரத்தில் திரும்பும் பயன்பாட்டிற்கு ரூ.530, 50 தடவை பயன்பாட்டிற்கு மாத கட்டணம் ரூ.11780 ஆகவும் உயர்த்தப்படவுள்ளது.3 அச்சு கனரக வாகனங்களுக்கு ஒரு முறை பயன்பாட்டிற்கான கட்டணம் ரூ.385-ம், 24 மணி நேர பயன்பாட்டு கட்டணம் ரூ.580-ம், 50 தடவை பயன்பாட்டிற்கு மாத கட்டணம் ரூ.12,855 ஆகவும், 4 முதல் 6 அச்சு வரையிலான கனரக வாகனங்கள் ஒருமுறை பயன்பாட்டிற்கு ரூ.555-ம், 24 மணி நேரத்தில் திரும்பும் பயன்பாட்டிற்கு ரூ.830-ம், 50 தடவை பயன்பாட்டிற்கான மாத கட்டணம் ரூ.18475 ஆகவும் உயர்த்த ப்படவுள்ளது.7 மற்றும் அதற்கு மேல் அச்சு கொண்ட கனரக வாகனங்களுக்கு ஒரு முறை பயன்பாட்டிற்கான கட்டணம் ரூ.675-ம், 24 மணி நேரத்தில் திரும்பும் பயன்பாட்டிற்கான கட்டணம் ரூ.1010-ம், 50 தடவை பயன்பாட்டிற்கு மாத கட்டணம் ரூ.22495ஆகவும் என கடுமையாக உயர்த்தப்படவுள்ளது. இந்த கட்டண உயர்வால் வாகன உரிமையாளர்களும், வாடகை வாகன ஓட்டிகளும், கடுமையான அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஏற்கனவே வாகன வரிகளும், உதிரி பாகங்களின் விலை உயர்வும் அதிமாக உள்ள நிலையில் டோல் கட்டணமும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளதால் போக்குவரத்திற்கான செலவுகள் கடுமையாக அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.இதனால் பொது மக்கள் அன்றாடம் பயன் படுத்திடும் அத்தியாவசிய பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்திடும். இதனால் அனைத்து தரப்பினருக்கும் பாதிப்புகள் ஏற்படும் என்று வாகன ஓட்டுனர்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# நெல்விதை நேர்த்தி வேளாண் கல்லூரி மாணவி விளக்கம்

மேலூர், மார்ச் 28-

மதுரை வேளாண் கல்லூரியில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவி கு.செ. ஹேம பாரதி கிராமப்புற வேளாண்மை பணிகள் அனுபவத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம் மேலூர் அருகே அ.வல்லாளப்பட்டியில் பணியாற்றி வருகின்றார்.

இதையொட்டி விவசாயிகளுக்கு நடந்த பயிற்சி முகாமில் ட்ரைகோ டெர்மா விரிடே பயன்படுத்தி நெல் விதை நேர்த்தி செய்யும் முறையையும் அதன் நன்மைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு துண்டுபிரசுங்கள் வழங்கப்பட்டன. இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

# டிரான்ஸ்பார்மர் வெடித்து சிதறி மின்வாரிய ஊழியர்கள் காயம்

**வத்தலக்குண்டு, மார்ச் 28-**

திண்டுக்கல்மாவட்டம்வத்தலக்குண்டுவில் டிரான்ஸ் பார்மர் வெடித்துச்சிதறிய சம்பவத்தில், மின்வாரியஊழியர்கள் 2 பேர்காயமடைந்தனர்.வத்தலக்குண்டுவில் உள்ள மதுரை சாலையில் அரசு போக்குவரத்து கழக பணிமனை எதிர்புறம் திருநகர் செல்லும் சாலை பையொட்டி மின்சார டிரான்ஸ்பார்மர் அமைக் கப்பட்டு உள்ளது.இந்நிலையில் நேற்று அந்த ட்ரான்ஸ்பார்மரில் திடீரென பழுது ஏற்பட் டது. இதுகுறித்து தகவலறிந்த வத்தலகுண்டு மின்வாரியஊழியர்கள் பாலசந்தர், மதுக்குமார் ஆகியோர் அந்த பழுதை சரிசெய்தனர்.பின்னர் அவர்கள் கீழே இறங்கிய போது எதிர்பாரா விதமாக டிரான்ஸ் பார் மர் திடீரென தீப்பிடித்து வெடித்து சிதறியது.

இந்த விபத்தில் பாலசந்தர்.மதுக்குமார் என இருவரும் காயமடைந்தனர். இதையடுத்து அப்பகுதி யில் இருந்தவர்கள் அவர் களை மீட்டு வத்தலகுண்டு அரசுமருத்துவமனையில் அனுமதித்தனர். அங்குஅவர்களுக்குசிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது.விபத்தை தொடர்ந்து அப்பகுதியில் மின்சாரம் துண டிக்கப்பட்டது. தகவலறிந்த வத்தல குண்டு தீயணைப்பு நிலைய அலுவலர்கள் முத்து செல் வம், வெங்கடேசன் ஆகி யோர் தீயணைப்பு வீரர் களுடன் விரைந்து சென்று டிரான்ஸ் பார்மரில் பற்றிய தீயை அணைத்தனர். இந்த தீடீர் தீ விபத் தால் வத்தல குண்டு நகரம் சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாக இருளில் மூழ்கியது. வத் தலகுண்டு இன்ஸ்பெக்டர் சிலைமலை நேரில் சென்று பார்வை விசாரணை நடத்தி வரு கிறார்.

# அசத்தலான ப்ரெஸ்டிஜின் புதிய டிஜி கெட்டில் கலெக்ஷன்

**சென்னை, மார்ச் 28-**

TTK ப்ரெஸ்டிஜ் ஆனது நீங்கள் தேநீர், காபி மற்றும் உடனடி உணவு வகைகளை எவ்வாறு தயாரிக்கிறீர்கள் என்பதை மறுவ ரையறை செய்யக்கூடிய தனது மிக சமீபத்திய டிஜி கெட்டில் ரேஞ்சை பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஸ்மார்ட் தொழில்நுட்பம், நவீன அழகியல், மற்றும் மேம்பட்ட பாது காப்பு அம்சங்களுடன் தொகுக்கப்பட்ட இந்த புதிய கலெக்ஷன் ஆனது துல்லியமான வெப்பமாக்கலையும், சிரமமற்ற பயன் பாட்டையும் அதிகபட்ச சௌகரியத்தையும் உறுதிபடுத்துகிறது.

தனது ரேஞ்சை விரிவுபடுத்தும் வகையில் TTK ப்ரெஸ்டிஜ் ஆனது மேலும் அறிமுகப்படுத்துகிறது ப்ரெஸ்டிஜ் கிளாஸ் கெட்டில் 1.8L மற்றும் ப்ரெஸ்டிஜ் கூல் டச் கெட்டில் 1.5L என்ற நுகர்வோரின் பன்முக தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய இரு தயாரிப்புகளை. ப்ரெஸ்டிஜ் கிளாஸ் கெட்டில் 1.8L ஆனது தனது ஸ்லீக் கிளாஸ் பாடி, நீல நிற LED இண்டிகேட்டர் மற்றும் மெட்டாலிக் ரோஸ் கோல்ட் ஃபினிஷ் ஆகியவற்றினால் ஸ்டைலின் மற்றும் செயல்பாட்டுத்தன்மையை தெரிவாற்ற வகையில் ஒன்று கலக்கிறது. மேம்பட்ட பாதுகாப்பு மற்றும் செயல்திற னுக்காக வடிவமைக்கப்பட்ட இது ஆட்டோ கட்-ஆஃப், டிரை ஹீட் ப்ரொட்டெக்ஷன் மற்றும் ஒரு கன்சீல்ட் ஹீட்டிங் எலிமெண்ட் (கூட்டுலனாகாத வெப்ப கூறு) ஆகியவற்றுடன் பொருத் தப்பட்டுள்ளது. வெள்ளை மற்றும் கருமை நிறங்களில் கிடைக் கின்ற ப்ரெஸ்டிஜ் கூல் டச் கெட்டில் 1.5L ஆனது தொடுவதற்கு குளிர்ச்சியான வெளிப்புறத்தின் மூலம் ஒரு ஸ்டைலிலான மற் றும் பாதுகாப்பான விருப்பத்தேர்வாகிறது மற்றும் கொதித்துக் கொண்டிருக்கையிலேயே கூட இதை கையாளுவதற்கு பாது காப்பானதாக்குகிறது. இதில் ஆட்டோ கட்-ஆஃப், டிரை ஹீட் ப்ரொட்டெக்ஷன் மற்றும் ஒரு கன்சீல்ட் ஹீட்டிங் எலிமென்ட் ஆகியன இடம்பெறுவதால் இது ஒரு தடையற்ற மற்றும் கவ லையற்ற அனுபவத்தை உறுதிபடுத்துகிறது.

# ஹேவல்ஸ் தூதர்களாக நயன்தாரா, விக்னேஷ் சிவன் நியமனம்

**சென்னை, மார்ச் 28-**

புதுமை மற்றும் உயர்தர தயாரிப்புகளுக்கு பெயர் பெற்ற இந்தியாவின் மின்சாதன பொருட்கள் உற்பத்தி துறையில் முன்னணி பிராண்டான ஹேவல்ஸ் நிறுவனம், தனது தயா ரிப்புகளை தென்னிந்தியா முழுவதும் கொண்டு செல்லும் வகையில் அதன் விளம்பர தூதர்களாக, பிரபல நட்சத்திர ஜோடிகளான நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் ஆகி யோரை நியமித்துள்ளது. தென்னிந்திய மக்களிடையே மிக வும் பிரபலமான இந்த ஜோடி ஹேவல்ஸ் நிறுவனத்தின் அனைத்து தயாரிப்புகளையும் அனைவரிடமும் கொண்டு செல்லும் என்று இந்நிறுவனம் உறுதியாக நம்புகிறது.

நவீன வீடுகளுக்கு ஏற்ற புதுமையான, நம்பகமான மற் றும் அழகிய தயாரிப்புகளை வழங்கும் ஹேவல்ஸ் பிராண் டின் முயற்சியுடன் அவர்களின் துடிப்பான கூட்டாண்மை ஒத் துப்போவதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. முதல்முறை யாக நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் ஜோடியாக இணைந்து நடிக்கும் விளம்பரம் ஹேவல்ஸ் பிராண்டின் விளம்பரம் ஆகும். அவர்கள் எங்களின் விளம்பர தூதர்களாக இணைந்திருப்பது என்பது தென்னிந்தியாவில் எங்களின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கும் என்றும் இந்நிறுவனம் கூறியுள்ளது.

# 'தமிழகத்தைக் கூலாக மாற்றும் ஏசி சலுகைகள்' என்ற புதிய திட்டம் ஃபிளிப்கார்ட் அறிமுகம்

**மதுரை, மார்ச் 28-**

இந்தியாவின் உள்நாட்டு மின்வணிக தளமான ஃபிளிப் கார்ட், கடுமையான கோடை வெப்பத்தை சமாளிக்க குதூ கல மூட்டும் அசத்தலான சலு கைகளை இணைத்து 'தமிழ கத்தைக் கூலாக மாற்றும் ஏசி சலுகைகள்' என்ற புதிய திட் டத்தை அறிமுகப்படுத்தியுள் ளது. 22 ஃபீட் டிரைபல் வோர்ல்டுவைடு நிறுவனத் தால் கருத்துருவாக்கம் செய் யப்பட்டுள்ள இந்த திட்டம், மிகைப்படுத்தப்பட்ட ஆனால் தொடர்புடைய சூழ் நிலைகள் மூலம் சுட்டெரிக் கும் வெப்பத்தின் தாக்கத்தை எடுத்துக்காட்டுகிறது – ஃபி ளிப்கார்ட்டின் குளிரூட்டும் தீர்வுகள் மிகவும் தேவை யான நிவாரணத்தை வழங்கி வெப்பதான தருணங்களும் சிறந்த நிலைக்கு மாறுவதை இது காட்சிப்படுத்துகிறது. இந்திய குடும்பங்கள் எதிர் கொள்ளும் கோடைக்கால சவால்களை எடுத்துக்காட் டும் வகையில் ஒரு புதிய விளம்பரத் திட்டத்தை ஃபி ளிப்கார்ட் தொடங்கியுள்ளது, அதாவது கடுமையான வெப் பம் முதல் அதிகரித்து வரும் கோபம் வரை இதில் படம் பிடிக்கப்பட்டுள்ளது. மூன்றா வது படம், அதிகரித்து வரும் வெப்ப நிலையால் ஏற்படும் எரிச்சலால் ஒரு ஜோடியின் விடுமுறை திட்டம் எப்படி தடம் புரள்கிறது என்பதை நகைச்சுவையாக சித்தரிக்கி றது. இந்த திட்டம் மார்ச் 26–31 வரை நடைபெறும் பிளிப் கார்ட் கூலிங்டேஸுடன் இணைக்கப்பட்டுள்ளது, 26,490 முதல் தொடங்கும் 1.5 டன் ஏசிகள், 1,999 முதல் தொடங்கும் ஆற்றல் திறன் கொண்ட மின் விசிறிகள் மற் றும் 3,999 முதல் தொடங்கும் கூலர்கள் போன்ற தயாரிப்பு களை வழங்குகிறது. வரவி ருக்கும் கோடை மாதங்களை இந்தியா எதிர்கொள்ள தயா ராகி வருவதால், குளிரூட்டும் தீர்வுகளை மேலும் அணுகக் கூடியதாகவும் மலிவுவிலை யிலும் மாற்றுவதே இந்த விளம்பரப் பிரச்சாரத்தின் நோக்கமாகும். "ஃப்ளிப் கார்ட்டில், 'தமிழகத்தைக் கூலாக மாற்றும் ஏசி சலுகை கள்" விளம்பரப் பிரச்சாரத் தின் மூலம், சிறந்த பொருட் களை தரமான சலுகைகள் மூலம் வழங்கி உண்மையான நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். கூடுதலாக, சூப்பர் காயின்ஸ் ஒப்பந்தங்கள் மற்றும் பரி மாற்ற சலுகைகள் மூலம், வாடிக்கையாளர்கள் அதிக நிதி நெகிழ்வுத்தன்மையை அனுபவிக்க முடியும் என்று ஃபிளிப்கார்ட்டின் சந்தைப்ப டுத்தல் மற்றும் ஊடகத் தலை வர் பிரதிக் ஷெட்டி கூறினார்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

## மதுரை மாநகராட்சி பட்ஜெட் தாக்கல்:
# முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார் மேயர்

**மதுரை, மார்ச் 28-**

மதுரை மாநகராட்சியில் 2025-26 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக் கல் செய்யப்பட்டுள்ளது. வருவாய் ரூ.1,439.40 கோடியாகவும், செலவி னம் ரூ.1,480.13 கோடியாகவும் மதிப்பிடப்பட்டு ரூ.40 கோடி பற் றாக்குறை பட்ஜெட்டாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பட்ஜெட் பற்றி விவாதிக்க அனுமதி கோரி மாநகராட்சி அதிமுக எதிர்க்கட்சித் தலைவர் சோலைராஜா தலைமை யில் அக்கட்சி கவுன்சிலர்கள் கூச் சல் போட்டனர். அவர்களுக்கு எதி ராக திமுக கவுன்சிகளும் குரல் எழுப்பியதால் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. மதுரை மாநகராட்சி பட்ஜெட் தாக்கல் செய்யும் கூட் டம் மேயர் இந்திராணி தலைமை யில் நடந்தது. ஆணையர் சித்ரா, துணை மேயர் நாகராஜன் முன் னிலை வகித்தனர். மேயர் பட் ஜெட்டை வாசிக்க தொடங்கிய தும், மாநகராட்சி அதிமுக எதிர்கட் சித் தலைவர் சோலைராஜா தலை மையில், அக்கட்சி கவுன்சிலர்கள் எழுந்து, பட்ஜெட் ஏழை, நடுத்தர மக்களை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும், அவர்கள் நலனை அடிப்படையாக கொண்ட தாக இருக்க வேண்டும் என்றனர்.

மேலும், பட்ஜெட்டை பற்றி விவாதிக்க எதிர்கட்சி கவுன்சிலர்க ளுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றனர். அவர்களை அமர சொல்லி கோஷமிட்ட திமுக கவுன் சிலர்கள், "பட்ஜெட்டை வாசிக்க வில்லை, அதற்குள் குறை சொல லக்கூடாது, வெற்று அரசியலுக்காக பேசக்கூடாது, அமருங்கள்," என்ற னர். சில நிமிடங்கள் நீடித்த திமு க-அதிமுக கவுன்சிலர்கள் கூச்சல் முடிந்தபிறகு, மேயர் இந்திராணி பட்ஜெட்டை வாசிக்கத் தொடங்கி னார்.

**வழிகாட்டுதல் நிகழ்ச்சி**

2025-2026 நிதி ஆண்டில் மாநக ராட்சியின் மொத்த வருவாய் ரூ.1,439.40 கோடியாகவும், செலவி னம் ரூ.1,480.13 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அதனால், ரூ.40 கோடி பற்றாக்குறை பட் ஜெட்டாக மேயர் தாக்கல் செய்தார். மேயர் இந்திராணி பொறுப்புக்கு



வந்தபிறகு தற்போதுதான் முதல் முறையாக பற்றாக்குறை பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பட் ஜெடில் குறிப்பிட்டுள்ளவை பற்றி மேயர் இந்திராணி பேசியதாவது:- மாநகராட்சியால் ஈட்டப்படும் ஒவ் வொரு ரூபாயும் எந்த அளவு திற மையாக செலவிடப்படுகிறது என் பதை விளக்குவதே பட்ஜெட்டின் நோக்கம். இந்த பட்ஜெட் வெறும் செலவினத்தை மட்டும் இலக்காக கொண்டதல்ல, சாதனை, இலக்கை எய்தல், செலவினத்தின் மதிப்பை ஆய்தல் போன்றவற்றையும் அடிப் படையாக கொண்டது. மாநக ராட்சி பள்ளிகளில் படித்த இரண்டு மாணவர்கள் மருத்துவப் படிப்புக ளிலும், ஒரு மாணவி பல் மருத்து வத்திலும், 6 மாணவர்கள் பொறியி யல் படிப்பிலும் சேர்ந்துள்ளனர். மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள், மனநல பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மாட்டுத்த வாணி பேருந்து நிலைய கழிப்ப றைகள் மட்டுமில்லாது, தற்போது கீழசித்திரைவீதி, தெற்கு சித்திரை வீதி, தமுக்கம் மைதானம், மாநக ராட்சி வளாகப்பகுதியில் உள்ள கழிப்பறைகள் இலவசமாக பயன் பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள் ளது. ரூ.1609.69 கோடியில் நிறை வேற்றப்படும் பெரியாறு கூட்டுக் குடிநீர் திட்டப்பணி 90 சதவீதம் முடிந்துள்ளது.

**தெருவிளக்குகள்**

மக்கள் தொகை பெருக்கத்தை அடிப்படையாக கொண்டு இந்த திட்டம் நிறைவேற்றப்படுகிறது. பாத்திமா கல்லூரி முதல் பரவை மார்க்கெட் வரை ரூ.1.45 கோடியி லும், குருவிக்காரன் சாலை முதல் விரகனூர் சந்திப்பு வரை ரூ.1.55 கோடியில் தெருவிளக்குகள் அமைக்கப்படுகிறது. மாநகராட்சி யில் ரூ.314 கோடியில் குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட் டம் நிறைவேற்றப்படுகிறது. பெரி யாறு பேருந்து நிலையத்தில் ரூ.112 கோடியில் கட்டிய வணிக வளாகம் விரைவில் திறக்கப்பட உள்ளது.

மாநகராட்சி தூய்மைப்பணியா ளர் குழந்தைகளின் கல்வி கற்கும் ஆர்வத்தினை மேம்படுத்தும் நோக் கில் 10ம் வகுப்பு, ப்ளஸ்-2 தேர்வுக ளில் ஒவ்வொரு பாடத்திலும் முதல் 3 இடங்களை பெறுவோ ருக்கு ஊக்கத்தொகை வழங்கப்ப டும். மாநகராட்சியின் 24 பள்ளிக ளில் அதிவீன படிப்பகங்கள் ரூ.3 லட்சம் வீதம் பல்துறை அறிஞர் களை கொண்டு அமைக்கப்பட உள்ளது. இதற்காக ரூ.75 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**புதிய நூலகம்**

மாநகராட்சி பள்ளி மாணவர் கள் தமிழ் மொழியின் தொன்மை, கலாச்சாரம், எதிர்கால படிப்புகள் பற்றி தெரிந்து கொள்ள அறிவுசார் சான்றோரை கொண்டு வழிகாட்டு தல், ஊக்குவித்தல் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மாநகராட்சி மைய அலுவலகத்தில் ரூ.15 லட்சத்தில் வார இதழ்கள், தினசரி பத்திரிக்கை கள் மற்றும் பிற நூல்களை ஒருங்கி ணைத்து நூலகம் அமைக்கப்படும். மாநகராட்சி பள்ளிகளில் சிசிடிவி கேமராக்கள், ஒலிஒலி அமைப்பு கள் ரூ.2 கோடியில் ஏற்படுத்தப்ப டும். மாநகராட்சி உரக்கிடங்கு அமைந்துள்ள வெள்ளக்கல் பகுதி யில் சுற்றுச்சூழல் துறை பங்களிப் புடன் பசுமை வனக்காடுகள் அமைக்கப்படுகிறது. மழைநீர் வடி கால் பணிகளை மேற்கொள்ள ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உணவு சுற்றுலா முக்கியத்து வம் பெறும் மதுரையில், மாட்டுத் தாவணி பகுதியில் ரூ.3 கோடியில் உணவு வீதி அமைக்கப்படுகிறது. மாநகராட்சிக்குட்பட்ட மேம்பால ஓரங்களில் அலங்கார மின்விளக்கு கள், அலங்கார செடிகள் அமைத்து அழகுப்படுத்த ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநகராட்சிப்ப குதிகளில் மக்கள் அதிகம் கூடும் சாலைகளை கண்டறிந்து 'ஸ்மார்ட் ரோடு அமைக்கப்படும். மாகநராட் சிப் பகுதிகளில் ரூ.10 கோடியில் இரு அறிவியல் பூங்கா அமைக்கப் படும். மாநகராட்சி சுற்றுச்சூழல் பூங்கா ரூ. 2கோடியில் பராமரிக்கப் படும் என்று அவர் தெரிவித்தார்.

**பட்ஜெட் உடைந்த அப்பளம்**

அ.தி.மு.க. விமர்சனம்: மாநக ராட்சி எதிர்க்கட்சி தலைவர் சோலைராஜா செய்தியாளர்களிடம் கூறுகையில், "மாநகராட்சி பட் ஜெட்டில் புதிதாக எதுவும் இல்லை. அரைத்த மாவையே மீண் டும் அரைத்துள்ளனர். அதனால், பட்ஜெட் அப்பளம் போல் உடைந் துப் போய்விட்டது. தரமான குடி நீர், சுகாதாரம், விடுப்பட்ட வார்டு களில் தெருவிளக்கு, சாலைகள், பிர தான மழைநீர் கால்வாய்களை தூர் வார வேண்டும், கழிவுநீரை முழு மையாக சுத்திரிப்பு நிலையத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் போன்றவைதான் மக்களின் எதிர் பார்ப்புகள். ஆனால், இதற்கான மேம்பாட்டு திட்டங்கள் எதுவும் பட்ஜெட்டில் இடம்பெற வில்லை," என்றார். பொறுப்பு இல் லாத கவுன்சிலர்கள்: பட்ஜெட் தாக் கல் கூட்டம் 10.30 மணிக்கு தொடங் குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், 11 மணிக்கு மிக தாமத மாக தொடங்கியது. மேயர் இந்தி ராணி, சுமார் ஒரு மணி நேரம் பட் ஜெட்டில் குறிப்பிட்ட சிறப்பு அம் சங்களை வாசித்தார். கவுன்சிலர்கள் இதுவரை நடந்த கூட்டங்களில், கழிவுநீர், சாலைகள், தெருவிளக்கு, குடிநீர், மாநகராட்சி பள்ளிகள் போன்றவை பற்றி பொதுமக்களுக் காக பலமுறை பேசியிருப்பார்கள். இவை தொடர்பாகதான் மேயர் பட்ஜெட்டில், அடுத்த ஒரு ஆண் டில் மாநகராட்சி நிறைவேற்றப்போ கும் திட்டங்கள், அறிவிப்புகள், மாநகராட்சியின் நிதி நிலை, செல வினங்கள் போன்ற முக்கியமான வற்றை குறிப்பிட்டுக் கொண்டிருந் தார்.

ஆனால், பெரும்பாலான கவுன் சிலர்கள் , அவரது பேச்சை சுத்த மாக கேட்கவே இல்லை. மண்ட லத் தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், கவுன்சிலர்கள், தங் கள் பக்கத்தில் இருப்பவர்களிடம் பேசிக்கொண்டது மட்டுமில்லாது அடுத்தடுத்த இருக்கைகள், எதிர் திசையில் இருப்பவர்களையும் சத் தம் போட்டு அழைத்தும், சைகை காட்டியும் சத்தமாக தங்களை மறந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, கவுன்சிலர்களுக்கான வார்டு நிதி சென்ற ஆண்டைபோல் ரூ.25 லட்சம் ஒதுக்கப்படும் என மேயர் அறிவித்தார். ஆனால், தொகை விவரத்தை முழுமையாக கேட்காத கவுன்சிலர்கள், மேஜையை தட்டி ஆரவாரம் செய் தனர். அதிமுக கவுன்சிலர், வார்டு நிதி கூட்டவில்லை, இது போன ஆண்டு நிதிதான் என்றதால் கூட் டத்தில் சிரிப்பலை ஏற்பட்டது. சுதாரித்துக் கொண்ட திமுக கவுன் சிலர்கள், மேயரிடம் முறையிட்ட னர். மேயர், ஆணையர் சித்ராவிடம் அவர்களது கோரிக்கையை பரிந்து ரைத்தார். கவுன்சிலர்கள் இந்த பொறுப்பில்லாத செயல், பேச்சு, சிரிப்பு, சத்தங்களுக்கு மத்தியில் மேயர் பட்ஜெட்டை வாசித்து முடித்தார். கவுன்சிலர்களின் இந்த பொறுப்பற்ற செயல், மாமன்ற கூட்டத்தை பார்க்க வந்த பொதுமக் கள், அதிகாரிகளை முகம் சுழிக்க வைத்தது. கவுன்சிலர்கள் அரசியல் வாதிகள் என்பதால் அவர்களை அழைத்து கண்டிக்கவும், கட்டுப்ப டுத்தவும் முடியாமல் கூட்டரங்கில் அதிகாரிகள் அமர்ந்திருந்தனர்.

# மாணவர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி

**சிவகங்கை, மார்ச் 28-**

கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் விளை யாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏதுவாக, அறிவி யல் பூர்வமான பயிற்சி, தங்கு மிட வசதி மற்றும் சத்தான உண வுடன் கூடிய சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் தமிழ் நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் செயல்ப டுத்தப்பட்டு வருகின்றன. அதில், தடகளம், கூடைப்பந்து, குத்துச் சண்டை, கையுந்துபந்து, பளுதூக் குதல், வாள்வீச்சு ஆகிய விளை யாட்டு களில் பயிற்சி பெறுவ தற்கு மாணவர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை, நேரு விளையாட்டரங்கிலும், ஹாக்கி விளையாட்டில் பயிற்சி பெறுவதற்கு மாணவர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி தூத் துக்குடி மாவட்டம், கோவில்பட் டியிலும், தடகளம், குத்துச்சண் டை, கையுந்துபந்து, கால்பந்து, பளுதூக்குதல், ஜூடோ ஆகிய விளையாட்டுகளில் பயிற்சி பெறுவதற்கு மாணவியர் களுக் கான சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை, நேரு உள் விளையாட்டரங்கிலும், கூடைப் பந்து, கைப்பந்து, ஹாக்கி, கபாடி ஆகிய விளையாட்டுகளில் பயிற்சி பெறுவதற்கு மாணவியர் களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதி வேலூர் காட்பாடியிலும் செயல்பட்டு வருகிறது. மேலும், மாணவ, மாணவியர்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிக ளில் உள்ள விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று, சிறந்த விளை யாட்டு வீரர் வீராங்கனையாக விளங்குவதற்கு 01.01.2025 அன்று 17 வயது நிரம்பியவராக இருத் தல் வேண்டும். 12-ம் வகுப்பில் தேர்ச்சி கல்லூரியில் இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் மாணவ மாணவியர் தகுதியு டையவர் ஆவர். தனிநபர் மற் றும் குழு விளையாடுப் போட் டிகளில் பயிற்சி பெற விண்ணப் பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு பாரதியார் தின விளை யாட்டுப் போட்டிகள் அங்கீகரிக் கப் பட்ட மாநில விளையாட் டுக் கழகங்கள் நடத்தும், போட் டிகளில் முதல் மூன்று இடங்க ளில் வெற்றி பெற்றிருத்தலோ அல்லது தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு, தேசிய அளவில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள் இந்திய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு இந்திய விளையாட்டு அமைச்ச கம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களாகவோ, பன்னாட்டு அளவில் அங்கீகா ரம் பெற்ற போட்டிகளில் கலந்து கொண்டு மற்றும் பதக் கங்கள் பெற்றவர்களாகவோ, மாநில அளவில் முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் பதக் கம் பெற்றவர்களாகவோ இருத் தல் வேண்டும். விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர் வமுள்ள மாணவ, மாணவியர் கள், சிறப்பு விளையாட்டு விடுதி சேர்க்கைக்கு வருகின்ற 6-ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பித்தினை பூர்த்தி செய்திடல் வேண்டும். இணை யதள விண்ணப்பங்கள் மட் டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மற்ற விண்ணப்பங்கள் அனைத் தும் நிராகரிக்கப்படும். கூடுதல் விபரங்களுக்கு, ஆடுகள தகவல் தொடர்பு மையத்தினை 95140 00777 என்ற அலைபேசி எண் ணில் தொடர்பு கொண்டு விப ரங்கள் பெறலாம். மாணவ மாணவிகள் போட்டிகளில் தவ றாது கலந்து கொள்ளவேண்டும் என மாவட்ட கலெக்டர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## கணக்கன்பட்டியில்
# நீர் மோர் பந்தல் திறப்பு

**ஒட்டன்சத்திரம், மார்ச் 28-**

ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியம் கணக்கன்பட்டி ஊராட்சி திமுக சார்பில் கோடை காலத்தை முன்னிட்டு பொதுமக்களை வெயிலின் தாக்கத்திலிருந்து காக்கும் பொருட்டு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் நீர்,மோர் பந்தலை திறந்து வைத்துபொ துமக்களுக்கு குளிர் தரும் பழங்களை வழங்கினார் மேற்கு ஒன் றிய செயலாளர் தர்மராஜன். நிகழ்வில் முன்னாள் ஒன்றிய கவுன் சிலர் வேதாச்சலம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி உள்ளிட்ட நிர்வாகிகள் மாவட்ட, ஒன்றிய,சார்பு அணி நிர்வாகிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டனர். படம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியம் கணக் கன்பட்டியில் நீர் மோர் பந்தல் திறக்கப்பட்டது


மாண்பமை மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றம், மதுரை.
Tr.O.P.No.61/2023
தமிழன் --- மனுதாரர்
--- எதிரிடை ---
வரதராஜன்,
த/பெ.கோபால் ரத்தினம்,
523/A, கனகவேல் நகர்,
ஆத்திகுளம் 2-வது தெரு,
K.புதூர், மதுரை-7.
--- 2-ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தரப்பில் மாண்பமை திருமங்கலம் சார்பு நீதிமன்றத் தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.188/2020 வழக்கினை அங்கிருந்து மாற்றி மாண்பமை மதுரை 5-வது கூடுதல் மாவட்ட நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.178/2020 வழக்குடன் கூட் டாக சேர்த்து நடத்திட தாக்கல் செய்த Tr.O.P.No.61/2023 மனுவில் 2-ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக 15.04.2025-ல் வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் 2-ம் எதிர்மனுதாரருக்கு ஆட்சேபணையிரு ந்தால் காலை 10.00 மணிக்கு நீதிம ன்றத்தில் நேரில் ஆஜராகி தங்களது தரப்பு ஆட்சேபணையை தெரிவித்து க்கொள்ளவேண்டியது. தவறும் பட்ச த்தில் தங்களுக்கெதிராக ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கலாயிற்று.
T.ஆனந்தன்,B.A.,B.L.,
R.முத்துப்பாண்டி,B.Sc.,B.L.,
வழக்கறிஞர்கள், மதுரை.

உட்கோட்டம் நிர்வாக நடுவர் நீதிமன்றம் மற்றும் பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பழனி
வழக்கு எண் : ந.க.எண்.9707/2024
பழனிச்சாமி
த-பெ. பெருமாள்கவுண்டர்
வள்ளிக்காவலசு,
பொட்டிக்காம்பட்டி கிராமம்,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.
......மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் ஆகிய நான், எனது தாயார் பழனியம்மாள் க-பெ.பெரு மாள்கவுண்டர் அவர்கள் கடந்த 15.09.2021-ம் தேதி அன்று, மேற்படி முக வரி இல்லத்தில் இறந் ததை அறியாமையின் கார ணமாக உரிய அலுவலகத் தில் பதிவு செய்ய தவறிவி ட்டேன். தற்சமயம் உட் கோட்ட நிர்வாக நடுவர் (பழனி வருவாய் கோட்டாட் சியர் அலுவலகம்) நீதிமன் றத்தில் பதிவு செய்ய வேண்டி மனுத் தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சே பணை இருப்பின் 15 தின ங்களுக்குள் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தல் (பழனி வருவாய் கோட்டாட் சியர் அலுவலகம்) நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்ச த்தில் மேற்படி மனு ஒருத லைபட்சமாக பரிசீலணை க்கு எடுத்துக்கொள்ளப்ப டும் என்பதை அறியவும்.
மனுதாரர் :-
பழனிச்சாமி
த-பெ. பெருமாள்கவுண்டர்
வள்ளிக்காவலசு,
பொட்டிக்காம்பட்டி கிராமம்,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வாடிப்பட்டி
EA.No. 1 /2025 In
EP.No.8/2024 IN
O.S.No. 22 /2017
வேல்முருகன் --- மனுதாரர்/மனுதாரர்/வாதி /எதிரிடை/
S.கருப்பையா,
S/o R.சேதுபாண்டியன்
T.மாதவன் இல்லம்
மீனாம்பிகைநகர் 5 வது தெரு
ஜெய்ஹிந்திபுரம், மதுரை-11
...எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/ பிரதிவாதி
நோட்டீஸ்
மேற்படி நிர் நிறைவேறுதல் மனுவில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள E.A.No.01/2025 மனு சம்பந்தமாக மேன்மை தங்கிய வாடிப்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் வரும் 04/04/2025ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்கண்ட மனு வில் எதிர்மனுதாரர்களாகிய தங்களது தரப்பில் ஏதேனும் ஆட்சேபனை இருந் தால் வருகிற 04-04-2025ம் தேதியி ட்ட வாய்தா நாளன்று தாங்கள் மேற்க ண்ட நீதிமன்றத்தில் காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித் துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக மேற் படி மனுவில் ஒருதலைபட்சமாக தீர்மா னிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.
வாடிப்பட்டி
C.வெங்கடேசன் B.com,,,BL
அட்வகேட்

உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல்
வழக்கு எண்.
ஓ.மு.எண்.3455/2022/அ3
நாள் 29.06.2022
முத்துலட்சுமி, வயது 60,
க/பெ,லேட், கனேசன்,
க.எண்.140/1,வண்ணம்பட்டி,
செ.பாறைப்பட்டி கிராமம்,
ஆத்தூர் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.
...... மனுதாரர்
மேற்காணும் எண் வழக்கில் மனுதாரரின் கணவர் கனேசன் என்பவர் தன் தகப்பனார் கந்தசாமி பிள்ளை என்பவர் கடந்த 10.05.1992ம் தேதியன்று ஆத்தூர் தாலுகா, செ.பாறைப்பட்டி கிராமம், வண்ணம்பட்டி என்ற இடத்தில் இறந்ததை உட்கோட்ட நிருவாக நடுவர் (திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டி மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில் மனுதாரின் கணவர் கனேசன் காலமாகி விட்டபடியால் மேற்படி கனேசனின் மனைவியாகிய நான் தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 15 தினங்களுக்குள் உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றத்தில் (திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனு ஒருதலை பட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.
முத்துலட்சுமி,
க/பெ,லேட், கனேசன்,
140/1, வண்ணம்பட்டி,
செ.பாறைப்பட்டி கிராமம்,
ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். (மனுதாரர்)

மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்
I.A.No: 4 / 2024 IN
O.S.No: 225/2012
திருமதி S. மாபாக்கியசெல்வி (எ) பாக்கியசெல்வி
........ மனுதாரர்/ வாதி
-// Vs//-
பரகத் பேகம், W/o. சையதுஒலி
நடுவளவு செட்டியார் தெரு,
மேலூர் டவுன், மதுரை மாவட்டம்.
.... 13-ம் எதிர்மனுதாரர் / 13-ம் பிரதிவாதி
அறிவிப்பு
மேற்படி நம்பர் மனுவில் இந்திர் 13-ம் எதிர்மனுதாரர்/ 13-ம் பிரதிவாதி கனம் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு 09.04.2025 -ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10:30 மணியளவில் 13-ம் எதிர்மனுதாரர்/ 13 -ம் பிரதிவாதி ஆஜராகி தங்களது ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் ஒருதலைப்ப ட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவித்து க்கொள்ளப்படுகிறது.
வழக்கறிஞர்
திரு.S.மணிமாறன்
B.Sc., M.A.,L.L.B.,
மேலூர்

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். உசிலம்பட்டி.
அ.தி.மு.எண்.482/2025
மு.கிருஷ்ணவேணி
க/பெ.முத்துக்குமார்
என்.கொட்டாணிபட்டி, நல்லமரம்
அஞ்சல், பேரையூர் வட்டம்,
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
------ எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாராகிய மு.கிருஷ்ண வேணி, த/பெ.நடேசன், க/பெ.முத்துக்கு மார் ஆகிய நான் கடந்த 01.07.1966-ம் தேதி பேரையூர் வட்டம்,என்.கொட்டாணி பட்டி கிராமத்தில் உள்ள எனது பெற் றோரின் வீட்டில் வைத்து பிறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி உசி லம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலு வலகத்தில் மனு தாக்கல் செய்துள் ளேன்.அம்மனு மீதான விசாரணைக் கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவி ப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித் துக் கொள்ளலாம்.
மனுதாரர்
மு.கிருஷ்ணவேணி
என்.கொட்டாணிபட்டி கிராமம்.

மாண்புமிகு சார்பு நீதிமன்றம் சிவகங்கை
O.S.No: 223/2024
M.கீதா ..... வாதி
-// Vs//-
M.பூபதி ராஜா
S/o. (லேட்) முனியாண்டி,
ஒத்தவளவு, ஜெயங்கொண்ட நிலை கிராமம் சிங்கம்புணரி வட்டம்
சிவகங்கை மாவட்டம்.
T.சிரஞ்சீவி, S/o. தர்மராஜ்
ஒத்தவளவு, ஜெயங்கொண்ட நிலை கிராமம், சிங்கம்புணரி வட்டம்
சிவகங்கை மாவட்டம்.
...... 4, 7- பிரதிவாதிகள்
அறிவிப்பு :-
[illegible]
வழக்கறிஞர்கள்
திரு.S மணிமாறன், M.A., L.L.B., திரு. K.ராமன், B.A,B.L.,

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்-திண்டுக்கல்
ந.க.எண்-68/2024/அ5
இ.ப.வ.எண்-417/2023
K.ராஜா, த/பெ, கல்யாணி,
க.எண்.5/6/, ஏரக்காபட்டி,
ஊராளிபட்டி கிராமம்,
நத்தம் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்
வருவாய் கோட்டாட்சியர்-
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல்
எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தந்தை வழி பாட்டி அமிர்தம் என்பவர் கடந்த 28-12-2001 -ம் தேதி இறந்து விட்டார். [illegible]
K.ராஜா,
மனுதாரர்

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்
ந.க.எண்:-4937/2023/ஆ6
பி.ப.வ.எண்-218/2018/ஆ6
முத்துசாமி, த/பெ. நாகலிங்கம்,
தெற்குத்தெரு, மன்னவராவதி,
சிலுக்குவார் பட்டி கிராமம்,
நிலக்கோட்டை வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்
...மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்.
அறிவிப்பு
[illegible]
வருவாய் கோட்டாட்சியர் திண்டுக்கல்

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்
ந.க.எண்:-6493/2018/ஆ6
பி.ப.வ.எண்-309/2018
[illegible]
...மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மன்றம், திண்டுக்கல்.
அறிவிப்பு
[illegible]
வருவாய் கோட்டாட்சியர் திண்டுக்கல்

### இந்திய அணியின் புதிய கேப்டன் யார்?

# இங்கிலாந்து தொடரில் இருந்து ரோகித் விலகல்

**மும்பை, மார்ச் 28-**

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெறவிருக்கும் டெஸ்ட் தொடரில் இருந்து இந்திய அணி கேப்டன் ரோகித் சர்மா விலகவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

**மோசமான தோல்வி...**

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதிய பார்டர் - கவாஸ்கர் தொடரில் இந்திய அணி மோசமான தோல்வியைத் தழுவியது. மேலும், 10 ஆண்டுகளுக்குப் பின்னர் கோப்பையையும் பறிகொடுத்தது. இதனால், இந்திய வீரர்கள் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டனர். அதுமட்டுமின்றி, இந்திய வீரர்கள் உள்ளூர் போட்டிகளிலும் விளையாட அறிவுறுத்தப்பட்டனர்.

**விலகல் முடிவு...**

முதல்முறையாக உலக டெஸ்ட் சாம்பியன்ஸிப் இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற தவறிய நிலையில், கேப்டன் பதவியில் இருந்து ரோகித் சர்மா நீக்கப்படலாம் என்ற செய்திகள் உலா வந்த நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து ரோகித் சர்மா விலகுவதாக அறிவித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தாலும், விராட் கோலி தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டதாகவும் பி.சி.சி.ஐ.யின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ஒரு வேளை ரோகித் சர்மா விலகினால் புதிய கேப்டன் யார் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. துணை கேப்டன் பும்ரா இன்னும் காயத்தில் இருந்து மீளாத நிலையில் புதிய கேப்டன் பதவி யாருக்கு கிடைக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது.



**பயிற்சி ஆட்டம்...**

இதற்கிடையில், இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்னதாக இந்தியாவின் ஏ அணி இங்கிலாந்து லயன்ஸ் அணியுடன் 4 நாள்கள் கொண்ட 2 போட்டிகளில் விளையாடவிருக்கிறது. இந்தப் போட்டியில் முன்னணி வீரர்கள் சிலரும் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரு அணிகளும் மோதும் முதல் போட்டி ஹெடிங்லேயில் வருகிற ஜூன் 20 ஆம் தேதி தொடங்குகிறது. அதற்கு முன்னதாக, மே 30 ஆம் தேதி காண்டர்பெர்ரியில் முதல் பயிற்சி ஆட்டமும், ஜூன் 6 ஆம் தேதி நார்த்தாம்டன்னில் இரண்டாவது பயிற்சி ஆட்டமும் நடைபெறவுள்ளதாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

**கருண் நாயருக்கு வாய்ப்பு?**

உள்ளூர் தொடர்களில் சிறப்பாக விளையாடி வரும் கருண் நாயருக்கு இந்தியா ஏ அணியில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024-2025 இடைப்பட்ட காலங்களில் கருண் நாயர் சையத் முஷ்டாக் அலி, ரஞ்சி தொடர்களில் முன்னணி ரன் குவிப்பாளராக இருந்தார். ரஞ்சி கோப்பையில் 4 சதங்கள் மற்றும் 2 அரைசதங்கள் உள்பட 863 ரன்கள் குவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று

# இந்தியா வருகிறார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின்

**மாஸ்கோ, மார்ச் 28-**

பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இந்தியா செல்ல இருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கான இந்திய தூதரகமும், ரஷ்ய சர்வதேச விவகார கவுன்சிலும் இணைந்து நடத்திய "ரஷ்யா மற்றும் இந்தியா: ஒரு புதிய இருதரப்பு நிகழ்ச்சி நிரலை நோக்கி" என்ற தலைப்பிலான மாநாடு மாஸ்கோவில் நடைபெற்றது.

இதில், காணொலி காட்சி வாயிலாக உரையாற்றிய செர்ஜி லாவ்ரோவ், "அதிபர் விளாடிமிர் புதின் இந்திய அரசாங்கத் தலைவரின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். இந்தியக் குடியரசுக்கு ரஷ்யத் தலைவர் வருகை தர உள்ளதை அடுத்து அதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.

நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து முதல் வெளிநாட்டுப் பயணமாக கடந்த ஆண்டு ரஷ்யாவுக்கு வருகை தந்தார். இப்போது எங்கள் முறை." என்று தெரிவித்தார். இருப்பினும், பயணத்தின் தேதிகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

கடந்த ஆண்டு ஜூலையில் பிரதமர் மோடி ரஷ்யா சென்றார். கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளில் மோடியின் முதல் ரஷ்ய பயணமாக அது இருந்தது. ஏனெனில், அதற்கு முன்பு 2019 ஆம் ஆண்டு தூர கிழக்கு நகரமான விளாடிவோஸ்டாக்கில் நடந்த பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி ரஷ்யா சென்றார்.

கடந்த ஆண்டு ரஷ்யா சென்றபோது, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை இந்தியாவுக்கு வருமாறு பிரதமர் மோடி அழைத்தார். இந்த அழைப்பை ஏற்று புதின் இந்தியா வர உள்ளார்.

ரஷ்ய வெற்றியின் 80-ம் ஆண்டு தினம் வரும் மே 9-ம் தேதி மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் கொண்டாடப்பட இருக்கிறது. இதில் கலந்து கொள்ள இந்திய பிரதமர் மோடி உள்பட பல நாடுகளின் தலைவர்களுக்கு ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி ரஷ்யாவுக்கு வர வாய்ப்பு உள்ளதாக ரஷ்ய ஊடகமான டாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில் பொதுப்பணித்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 8 தொகுதிகள் கொண்ட கட்டுமான பணிகளுக்கான தரவு விவரப் புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கட்டுமான பணிகளுக்கான தரவு விவரப் புத்தகங்கள்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

**சென்னை, மார்ச் 28-**

முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (மார்ச் 27) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள 8 தொகுதிகள் கொண்ட கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரப் புத்தகங்களை வெளியிட்டார்.

தமிழ்நாட்டில் கட்டுமானம் மற்றும் பொறியியல் பணிகள் பல்வேறு துறைகள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறையிலும் அத்துறைக்கு ஏற்ப பணிகளை மேற்கொள்ள ஏதுவாக துறைவாரியாக தரவு விவரப் புத்தகங்கள் தனித்தனியாக பயன்பாட்டில் உள்ளது.

1984-ம் ஆண்டு பொதுப்பணித் துறைக்கென கட்டுமானப் பணிக்களுக்கான தரவு விவரப் புத்தகம் திருத்தியமைக்கப்பட்டு, இன்று வரை பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே, இதை உணர்ந்து தற்போது தமிழ்நாடு அரசு அனைத்து பொறியியல் துறைகளும் உபயோகிக்கும் வண்ணம் ஒருங்கிணைந்த கட்டுமானப் பணிக்களுக்கான தரவு விவரப் புத்தகம் தயாரிக்க, பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), தலைமையில் அனைத்து பொறியியல் துறைகளின் தலைமைப் பொறியாளர்கள் உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

காலப்போக்கில் பல்வேறு தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக கட்டுமானங்கள், நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் நவீன கட்டுமான முறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்களை கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரங்களின் மூலம் மதிப்பீட்டுத் தொகையினை ஒரே மாதிரியாக அனைத்து பொறியியல் கட்டுமானத் துறைகளிலும் மேற்கொள்ளும் வகையில், இக்குழு பல முறை கூடி விரிவான விவாதங்களுக்குப் பிறகு, தொகுதி – 1 பொதுப்பணித்துறை, தொகுதி-2 பொதுப்பணித் துறை மற்றும் இந்து சமய மற்றும் அறநிலையத்துறை, தொகுதி-3 நெடுஞ்சாலைத் துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தொகுதி 4,5,6,7& 8 - சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியம் ஆகிய 8 தொகுதிகள் கொண்ட கட்டுமானப் பணிகளுக்கான தரவு விவரப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இது கட்டுமானப் பொறியியல் துறைகள் அனைத்தும், எளிதான முறையில் மதிப்பீடு தயாரிக்க பெரிதும் பயன்படும்.

பொதுப்பணித் துறைக்கான கட்டுமானப் பணிக்களுக்கான இப்புதிய தரவு விவரப் புத்தகங்கள், 40 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது கட்டுமானத் துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தரவு விவரப் புத்தகங்களின் வாயிலாக அனைத்துவிதமான கட்டுமானப் பணிகளுக்கு தேவையான கட்டுமான பொருள்கள், வேலையாள்கள், இயந்திரங்கள் போன்றவற்றின் விரிவான விவரங்களை அறிந்து கொள்ள இயலும். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இந்தியாவுக்கு வழங்கும் நிதியை குறைக்க கோரிக்கை

**மும்பை, மார்ச் 28-**

பி.சி.சி.ஐ.-க்கு ஐ.சி.சி. வழங்கும் 38.5 சதவீத நிதியை 10 சதவீதமாக குறைக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

**30 பக்க அறிக்கை...**

சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் அமைப்பு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் நவீன கிரிக்கெட் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வுகளை விளக்கியுள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு 30 பக்கங்கள் கொண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) வருவாய் பகிர்வு முறை எப்படி வளைந்துள்ளது என்பதையும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) 38.5 சதவீத வருவாயை எடுத்துக் கொள்வதாக எடுத்துரைத்துள்ளது. மேலும், சர்வதேச கிரிக்கெட் நிதி உகந்ததாக இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

**பங்களிப்புகள் என்ன?**

இந்த அறிக்கையில், பிசி.சி.ஐ. ஏன் ஐ.சி.சி.யின் வருவாய் பகிர்வில் அதிக பங்குகளை எடுத்துக் கொள்கிறது என்பது பற்றிய காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும், இந்த அறிக்கையில் ஐ.சி.சி. வருவாயில் பி.சி.சி.ஐ. பங்களிப்புகள் என்னென்ன என்பது பற்றியும் எந்த தகவலும் இடம்பெறவில்லை. இதுதவிர இந்திய சந்தைக்கான ஒளிபரப்பு உரிமம் எவ்வளவு தொகைக்கு விற்பனையாகிறது என்பது பற்றியும் எந்த தகவலும் இல்லை. மேலும், இந்த தொகை காரணமாக ஐ.சி.சி.க்கு கிடைக்கும் நிதி எவ்வளவு என்பது பற்றியும் குறிப்பிடப்படவில்லை. இந்திய அணி போட்டிக்காக விளம்பரதாரர்கள் எந்தளவுக்கு வரிசையில் நிற்கின்றனர் என்பது பற்றியும் இந்த அறிக்கையில் எந்த தகவலும் இடம்பெறவில்லை.

**பெரும் பங்கு...**

இந்த அறிக்கையின் முக்கிய அம்சமாக ஐ.சி.சி. வருவாயில் பெரும் பங்கு பி.சி.சி.ஐ.க்கு செல்வதும் கிட்டத்தட்ட 50 சதவீத தொகை முதல் மூன்று பெரிய நாடுகளுக்கு மட்டுமே வழங்கப்படுவதும் எடுத்துரைக்கப்பட்டு உள்ளது. இது தவிர பி.சி.சி.ஐ.-க்கு வழங்கப்படும் 38.5 சதவீத நிதியை 10 சதவீதமாக குறைக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. அறிக்கை குறித்து சந்தை வல்லுநர்கள் கூறும் போது, பால் மார்ச் தலைமையிலான ஆணையம் வழங்கியுள்ள பரிந்துரைகள் ஆச்சரியம் அளிக்கும் வகையில் இருப்பதாகவும், ஒட்டுமொத்த விளையாட்டியின் வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு என்ன என்பதை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது என்று தெரிவித்தனர்.

### கலைஞர் கனவு இல்லம்:

# 1 லட்சம் புதிய வீடுகள் கட்ட ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கிடு

**சென்னை, மார்ச் 28-**

கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் 1 லட்சம் புதிய வீடுகள் கட்ட ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கிடு செய்து அரசானை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் 2025-26-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டை, சட்டசபையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கடந்த 14-ம் தேதி தாக்கல் செய்தார். அதில் 2025-26-ம் ஆண்டில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 1 லட்சம் புதிய வீடுகள் ரூ.3,500 கோடியில் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பட்ஜெட் அறிவிப்பின்படி கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், 2025-26ம் ஆண்டில் 1 லட்சம் புதிய வீடுகள் கட்ட ரூ.3,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. 2030-ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 8 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை - பெங்களூரு போட்டி:

# இன்று நள்ளிரவு 1 மணி வரை மெட்ரோ ரெயில்கள் இயக்கம்

**சென்னை, மார்ச் 28-**

சென்னை - பெங்களூரு கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு இன்று நள்ளிரவு 1 மணி வரை மெட்ரோ ரெயில்கள் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் கடந்த 22ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது . இதில் இன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற உள்ள லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோத உள்ளன. இந்த போட்டியையொட்டி இன்று நள்ளிரவு 1 மணி வரை மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி முடிந்து ரசிகர்கள் பாதுகாப்பாக திரும்புவதற்காக, நள்ளிரவு 1 மணி வரை மெட்ரோ ரெயில் சேவைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் போட்டிகளை காண வரும் ரசிகர்கள், போட்டியின் டிக்கெட்டை காண்பித்து மெட்ரோ ரெயில்களில் இலவசமாக பயணிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய அரசுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம்: தொண்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அழைப்பு

**சென்னை, மார்ச் 28-**

தமிழகத்தின் அனைத்து ஒன்றியங்களில் 29ம் தேதி நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்குமாறு தி.மு.க.வினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து தொண்டர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

அனைவருக்கும் பலனளிக்கும் சாதனைத் திட்டங்களுடன் நாம் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தாலும், நாளொரு போராட்டத்தை முன்னெடுத்தே நம் உரிமைகளைப் பெறக்கூடிய வகையில் மத்திய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

சிறப்பாகச் செயல்படுகின்ற மாநிலங்களைத் தண்டிப்பதையே தனது கொள்கையாகக் கொண்டிருக்கிற மத்திய பா.ஜ.க. அரசு, 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை விடுவிக்காமல் இருப்பதைச் சுட்டிக் காட்டி பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தேன்.

அதன் தொடர்ச்சியாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழியுடன் நேரில் சந்தித்து, 100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனே விடுவிக்க வேண்டும் எனக் கோரி மனு அளித்தார். மாநிலங்களவையிலும் திருச்சி சிவா எம்.பி. இது குறித்துப் பேசினார். மாநிலங்களின் பரப்பளவையும் மக்கள்தொகையையும் காரணம் காட்டி, திறமையாகத் திட்டங்களைச் செயல்படுத்தும் மாநிலங்களின் உரிமைகளை நசுக்கி, மக்களை வஞ்சிக்கும் போக்கைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது மத்திய பா.ஜ.க. அரசு.

100 நாள் வேலைத்திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனே விடுவிக்கக் கோரி, தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அளவில் மார்ச் 29-ஆம் நாள் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என கழகத்தின் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார். வியர்வை காய்வதற்கு முன்பே உழைப்பிற்கான ஊதியத்தை வழங்குவதுதான் நியாயமான செயலாகும். உழைத்தவர்கள் ஓடாய்த் தேய்கிற வரை, அவர்களின் உழைப்பை உறிஞ்சிவிட்டு, ஊதியத்தைத் தர மறுக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதன் உழைப்புச் சுரண்டலையும், உரிமைப் பறிப்பையும் உரக்க முழங்கிடுவோம். உரிமைகளை வென்றிடுவோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜஸ்தானை வீழ்த்தியது கொல்கத்தா

**கொல்கத்தா, மார்ச் 28-**

ராஜஸ்தான் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி கொல்கத்தா அணி அபார வெற்றி பெற்றது.

**6ஆவது ஆட்டம்...**

ஐ.பி.எல்.-இன் 6ஆவது ஆட்டத்தில் ராஜஸ்தானுடன் கொல்கத்தா அணி மோதியது. இதில் கே.கே.ஆர். அணியின் கேப்டன் ரஹானே டாஸ் வென்று பந்துவீச்சைத் தேர்வு செய்தார். இதில் முதலில் பேட்டிங் செய்த ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 151/9 ரன்கள் மட்டுமே எடுத்தது. ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் அதிகபட்சமாக துருவ் ஜூரெல் 33 ரன்கள் எடுத்தார். ஜெய்ஸ்வால் 29, சஞ்சு சாம்சன் 25 ரன்கள் எடுத்தார்கள். 5 வீரர்கள் ஒற்றை இலக்க ரன்களில் ஆட்டமிழந்தார்கள்.

*152 ரன்கள் இலக்கு...*

கடைசியில் ஜோப்ரா ஆர்ச்சர் அதிரடியாக விளையாடி 7 பந்துகளில் 16 ரன்கள் எடுத்தார். கே.கே.ஆர். அணியில் வருண் சக்கரவர்த்தி, மொயின் அலி, ஹர்சித் ராணா, வைபவ் அரோரா தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்கள். ஸ்பென்சார் ஜான்சன் 1 விக்கெட் எடுத்து 42 ரன்களை கொடுத்திருந்தார். 152 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

**டி காக் அபாரம்...**

2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்த கொல்கத்தா அணி 17.3 ஓவர்களில் 153 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. தொடக்க ஆட்டக்காரரான குவின்டான் டி காக் 61 பந்துகளில் 8 பவுண்டரி 6 சிக்ஸருடன் 97 ரன்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். ரகுவன்ஷியும் 22 ரன்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவினார்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஐதராபாத் | 1 | 1 | 0 | 2 | +2.200 |
| 2 | பெங்களூரு | 1 | 1 | 0 | 2 | +2.137 |
| 3 | பஞ்சாப் | 1 | 1 | 0 | 2 | +0.550 |
| 4 | சென்னை | 1 | 1 | 0 | 2 | +0.493 |
| 5 | டெல்லி | 1 | 1 | 0 | 2 | +0.371 |
| 6 | கொல்கத்தா | 2 | 1 | 1 | 2 | -0.308 |
| 7 | லக்னோ | 1 | 0 | 1 | 0 | -0.371 |
| 8 | மும்பை | 1 | 0 | 1 | 0 | -0.493 |
| 9 | குஜராத் | 1 | 0 | 1 | 0 | -0.550 |
| 10 | ராஜஸ்தான் | 2 | 0 | 2 | 0 | -1.882 |

## இன்றைய ஐ.பி.எல் (8-வது லீக்)



அணிகள் - சென்னை vs பெங்களூரு

இடம் - சென்னை மணி - இரவு 7.30

## எக்ஸ் பதிவுக்கு சுந்தர் பிச்சை பதில்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணி தனது முதல் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்சுக்கு எதிராக தோல்வியை தழுவியது. இந்த ஆட்டத்திற்கான குஜராத் அணியின் பிளேயிங் லெவனில் தமிழகத்தை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளரான வாஷிங்டன் சுந்தர் இடம்பெறாதது பலருக்கும் ஆச்சரியமாக அமைந்தது. ஏனெனில் சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய அணியில் இடம்பெற்று விளையாடி வரும் அவர் ஐ.பி.எல். -ல் பிளேயிங் லெவனில் இடம்பெறாதது பலரது மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இது குறித்து ரசிகர் ஒருவர் தனது எக்ஸ் பக்கத்தில், "இந்திய அணியின் சிறந்த 15 வீரர்களில் ஒருவராக இடம் பெறும் சுந்தருக்கு 10 அணிகள் இருக்கும் ஐபி.எல். தொடரில் பிளேயிங் லெவனில் இடம் பெறவில்லை என்பது மர்மமாகும்" என்று பதிவிட்டிருந்தார். ரசிகரின் இந்த பதிவிற்கு கூகுள் சி.இ.ஓ. சுந்தர் பிச்சை, "எனக்கும் கூட இந்த ஆச்சரியமாக இருக்கிறது" என்று பதிலளித்தார்.

## சென்னையில் டேபிள் டென்னிஸ்

உலக டேபிள் டென்னிஸ் ஸ்டார் கன்டென்டர் போட்டித் தொடர் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று (வியாழக்கிழமை) தொடங்கியது. மொத்தம் ரூ.2.35 கோடி பரிசுத் தொகைக்கான இந்த சர்வதேச போட்டி 30-ந் தேதி வரை நடக்கிறது. ஆண்கள், பெண்கள் ஒற்றையர், ஆண்கள், பெண்கள் இரட்டையர், கலப்பு இரட்டையர் ஆகிய 5 பிரிவுகளில் போட்டி நடைபெறுகிறது. 20 நாடுகளை சேர்ந்த 192 முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். இதில் சரத் கமல், சத்யன், மணிகா பத்ரா, ஸ்ரீஜா அகுலா உள்ளிட்ட 30 இந்திய வீரர், வீராங்கனைகளும் அடங்குவார்கள். காமன்வெல்த் மற்றும் ஆசிய போட்டியில் பதக்கம் வென்றவரான சென்னையை சேர்ந்த 42 வயதான சரத் கமல் இந்த தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அர்ஜென்டினா அணி இந்தியா வருகை

2022-ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற மெஸ்சி தலைமையிலான அர்ஜென்டினா கால்பந்து அணி, வருகிற அக்டோபர் மாதம் இந்தியா வருகிறது. இந்தியாவில் கால்பந்தை பிரபலப்படுத்தும் முயற்சியின் ஒரு அங்கமாக வரும் அர்ஜென்டினா அணி, கேரளாவில் நடைபெறும் கண்காட்சி போட்டியில் விளையாடுகிறது. மெஸ்சி உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் இதில் ஆடுகிறார்கள். 2011-ம் ஆண்டுக்கு பிறகு அர்ஜென்டினா அணி இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் முறையாகும்.

# யாருக்கெல்லாம் மகளிர் உரிமை தொகை கிடைக்காது: தமிழ்நாடு அரசு விளக்கம்

**சென்னை, மார்ச் 28-**

மகளிர் உரிமை தொகை திட்டத்தில் ரூ.1,000 யாருக்கெல்லாம் கிடைக்காது என்பது குறித்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கொள்கை விளக்க குறிப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரத்தை வழங்குவதற்காக, முதல்வர் மு.க. ஸ்டாலின் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை அறிவித்தார். இந்தத் திட்டம் சுமார் 115 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதத்திற்கு ரூ.1000/-வழங்குகிறது.

மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற தகுதி இல்லாதவர்கள் யார்?

* ரூ.25 லட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் ஈட்டும் குடும்பங்கள்.

* குடும்பத்தில் ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்திற்கு மேல் ஈட்டி வருமானவரி கணக்கு தாக்கல் செய்பவர்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள்.

* ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்திற்கு மேல் வருமானம் ஈட்டி தொழில் வரி செலுத்துவோர்.

* மாநில, மத்திய அரசு ஊழியர்கள் /பொதுத்துறை நிறுவனங்கள் / வங்கிகளின் ஊழியர்கள், வாரியங்கள். உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகளின் ஊழியர்கள் ஓய்வூதியதாரர்கள். மற்றும் அவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் (ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்களைத் தவிர அதாவது பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள். மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள்.

* ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சித் உறுப்பினர்கள். தலைவர்கள் மற்றும் சொந்த பயன்பாட்டுக்கு சீருந்து, ஈப்பு, டிராக்டர், கனரக வாகனம் போன்ற நான்கு சக்கர வாகனங்கள் வைத்துள்ளவர்கள்.

* ஆண்டுக்கு ரூ.50 லட்சத்திற்கும் மேல் ஆண்டு விற்பனை செய்து சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தும் தொழில் நிறுவன உரிமையாளர்கள்.

விதிவிலக்குகள் என்னென்ன?

* மாற்றுத் திறனாளிகள் நலத்துறையால் வழங்கப்படும் அறிவுசார் மாற்றுத்திறன் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன். முதுகுத்தண்டுவடம் / தண்டுவடம் மறப்பு நோய் மற்றும் பார்க்கின்சன் நோய் மாற்றுத்திறன், தசை சிதைவு நோய் மாற்றுத்திறன். தொழுநோய் மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை பெறும் உறுப்பினரைக் கொண்ட குடும்பங்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவை.

* இவ்வகைப்பாட்டினர் திட்டத்தின் பிற தகுதிகளைப் பூர்த்தி செய்து எவ்விதத் தகுதியின்மை வரவில்லை எனில் தகுதியானவர்கள். வகைப்பாட்டிலும் விண்ணப்பிக்கலாம்.

* வருவாய்த் துறையின் கீழ் மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளிகள் தவிர. அக்குடும்பத்தில் உள்ள தகுதி வாய்ந்த பெண்களும் திட்டத்தின் பிற தகுதிகளைப் பூர்த்தி செய்து எவ்வித தகுதியின்மை வகைப்பாட்டிலும் வரவில்லை எனில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை மாவட்டம் காந்தி அருங்காட்சியகம் உருகே உள்ள பூங்கா முருகன் கோயில் மண்டபத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு மாநில ஊரக - நகர்புற வாழ்வாதார இயக்கம் மாவட்ட வழங்கல் விற்பனைசங்கம் இணைந்து நடத்தும் மகளிர்சுய உதவிக்குழுக்கள் தயாரிப்பு பொருட்களின் மாவட்ட அளவிலான வாங்குவோர் மற்றும் விற்போர் சந்திப்பு கூட்டம் நிகழ்ச்சியின் கண்காட்சியினை கலெக்டர் பார்வையிட்டார். உடன் இணை இயக்குநர் தமிழரசி உள்ளார்.

## வல்லபாய் படேலின் மறு உருவம்:
# அமித்ஷாவிற்கு ஆர்.பி.உதயகுமார் புகழாரம்

**மதுரை, மார்ச் 28-**

இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேலின் மறு உருவமாக உள்துறை மந்திரி அமித்ஷா பார்க்கப்படுகிறார் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஆர்.பி. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 3 தினங்களுக்கு முன்பு டெல்லி சென்ற அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை நேரில் சந்தித்து 2 மணிநேரத்துக்கும் மேலாக ஆலோசனை நடத்தினார். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தகவல்கள் வெளியான நிலையில், அதனை எடப்பாடி பழனிசாமி மறுத்தார். செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, "கூட்டணி தொடர்பாக எதுவும் பேசவில்லை, தமிழகத்தின் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக பேசினேன்" என்று தெரிவித்தார். இந்த நிலையில், கட்சிக் கூட்டத்தில் அமித்ஷாவை புகழ்ந்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் பேசிய வீடியோ தற்போது வெளியாகியுள்ளது. அந்த வீடியோவில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேலின் மறு உருவமாக பார்க்கப்படும் உள்துறை மந்திரி அமித்ஷாவை, தமிழகத்தின் இரும்பு மனிதர் எடப்பாடி பழனிசாமி சந்தித்தார். இரண்டு மணிநேரத்துக்கு மேலாக பேசியிருப்பதை பற்றி பல கருத்துகள் எழுந்துள்ளன. ஆனால், தமிழகத்தின் நலனுக்காக அவர் முன் வைத்துள்ள கோரிக்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும். இருமொழிக் கொள்கையை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும் என்றும், நாடாளுமன்ற மறுசீரமைப்பில் தமிழகத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடக்க வேண்டும் என்றும் எடப்பாடி பழனிசாமி கோரிக்கை வைத்தார். யார் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் சந்திப்பின் காரணம் என்ன என்பதை திண்ணை பிரசாரம் மூலமாக அ.தி.மு.க.வினர் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நத்தம் பகுதி சிவாலயங்களில் பிரதோஷ விழா கோலாகலம்



**நத்தம், மார்ச் 28-**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் பங்குனி மாத பிரதோஷ விழா நடந்தது.இதையொட்டி நந்தி சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது.பின்னர் மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

இதைப்போலவே நத்தம் அருகே குட்டுப்பட்டியில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலிலும் பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# சாத்தான்குளம் இரட்டைக்கொலை வழக்கை விரைவில் முடிக்க மதுரை ஐகோர்ட்டு உத்தரவு

**தூத்துக்குடி, மார்ச் 28-**

சாத்தான்குளம் இரட்டைக்கொலை வழக்கை விரைவில் முடிக்க வேண்டும் என்று மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்தவர் ஜெயராஜ். இவருடைய மகன் பென்னிக்ஸ். இவர்கள் இருவரையும் போலீசார் கடுமையாக தாக்கியதில் படுகாயம் அடைந்து இறந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த இரட்டைக்கொலை குறித்து சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது. அப்போதைய சாத்தான்குளம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்-இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 9 போலீசார் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த இரட்டைக்கொலை வழக்கு மதுரை மாவட்ட முதன்மை செசன்சு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கில் சிறையில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர் ரகு கணேஷ், தனக்கு ஜாமீன் கேட்டு மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். அவருக்கு ஜாமீன் அனுமதிக்கக்கூடாது என ஜெயராஜ் மனைவி செல்வராணி இடையீட்டு மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுக்களை நீதிபதி முரளி சங்கர் ஏற்கனவே விசாரித்தார். அப்போது சி.பி.ஐ. மற்றும் செல்வராணி தரப்பில் மனுதாரருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என கடும் ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து, இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதி ஒத்திவைத்து இருந்தார்.

இந்த நிலையில் வழக்கின் தீர்ப்பை நீதிபதி முரளிசங்கர் நேற்றுமுன்தினம் பிறப்பித்தார். இதில், மனுதாரரர் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்றும், இந்த இரட்டைக் கொலை வழக்கு விசாரணையை கீழ்கோர்ட்டு (அதாவது மதுரை மாவட்ட கோர்ட்டு) 2 மாதத்தில் முடித்து தீர்ப்பு வழங்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

## 100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி வழங்க மறுப்பு:
# மத்திய அரசை கண்டித்து தி.முக. சார்பில் நாளை கண்டன ஆர்ப்பாட்டம்
## மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிவிப்பு

**திருமங்கலம், மார்ச் 28-**

100 நாள் வேலை திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் மத்திய அரசை கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று திருமங்கம் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர், த் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க மதுரை தெற்கு மாவட்ட திமுக விற்கு உட்பட்ட ஒன்றிய ங்களில் நாளை 29ம் தேதி சனிக்கிழமை அன்று காலை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் உறுதித் திட்டத்தின் 100 நாள் வேலைக்கு தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் மத்திய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இது தொடர்பாக மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வெளியிட்டுள்ள அறிவிப்பில்:-

திருமங்கலம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் மேற்கு ஒன்றியம் செக்கானூரணி, கரடிக்கல் ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் தனபாண்டியன் தலைமையிலும், திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் கப்பலூர், விடத்தக்குளம் ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டியன் தலைமையிலும், திருமங்கலம் தெற்கு ஒன்றியம் ஆலம்பட்டி, மீனாட்சிபுரம் ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் ஆலம்பட்டி சண்முகம் தலைமையிலும், கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் மருதங்குடி, செங்கப் படை ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் இராமமூர்த்தி தலைமையிலும், கள்ளிக்குடி தெற்கு ஒன்றியம் கள்ளிக்குடி, வில்லூர் ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் பா.மதன்குமார் தலைமையிலும், தே.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியம் வன்னி வேலம்பட்டி,சின்னா ரெட்டி பட்டி ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் நாகராஜன் தலைமையிலும், தே. கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றியம் டி.குன்னத்தூர், கொல்லவீரம்பட்டி ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் பாண்டியன் தலைமையிலும், தே.கல்லுப்பட்டி தெற்கு ஒன்றியம் சந்தையூர், சிலைமலைப்பட்டி ஆகிய இடங்களில் ஒன்றிய செயலாளர் தனசேகரன் தலைமையிலும், திருப்பரங்குன்றம் மற்றும் உசிலம்பட்டி தொகுதி ஒன்றிய கழங்கள் சார்பில் பல்வேறு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

இதில் ஒன்றிய செயலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளை செய்யும்படியும், தங்கள் பகுதியில் நடைபெறும், இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி பேரூர் த்திற்கு உட்பட்ட நிர்வாகிகள், வட்ட வார்டு கிளைக் செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் பூத் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் உடன்பிறப்புக்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். என்று தெரிவித்துள்ளார்.

## ராமநாதபுரம் நகராட்சி மாநகராட்சியாக அறிவிப்பு:
# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்த தி.மு.க.வினர்

**ராமநாதபுரம், மார்ச் 28-**

ராமநாதபுரம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த அறிவிப்பு வெளியிட்டதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து சட்ட மன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையில் ராமநாதபுரம் நகரசபை தலைவர் மற்றும் துணைத் தலைவர் உள்ளிட்டோர் நன்றி தெரிவித்தனர்.

மாவட்ட தலைநகரமான ராமநாதபுரத்தில் சிறப்பு நகராட்சியாக செயல்பட்டு வரும் ராமநாதபுரம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக தொடர் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தது. இதற்கேற்ப ராமநாதபுரம் நகராட்சியுடன் அருகில் உள்ள சூரங்கோட்டை, இளமனூர், பேராவூர், அச்சுந்தன் வயல், பட்டினம் காத்தான், ஆர்எஸ் மடை உள்ளிட்ட ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தும் முறையில் வகையில் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதன்படி ராமநாதபுரம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த எப்போது வேண்டுமானாலும் அறிவிப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்தது. இந்நிலையில் சமீபத்தில் சட்டமன்றத்தில் தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு ராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் நகராட்சிகள் மாநகராட்சியாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு ராமநாதபுரம் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

ராமநாதபுரம் நகரின் வளர்ச்சிக்கு இந்த மாநகராட்சி அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்நிலையில் ராமநாதபுரம் நகராட்சியை மாநகராட்சியாக அறிவிக்க நடவடிக்கை எடுத்ததற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட திமுக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையில் ராமநாதபுரம் நகராட்சி தலைவர் ஆர்.கே. கார்மேகம் மற்றும் துணைத் தலைவர் பிரவீன் தங்கம் ஆகியோர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். மேலும் ராமநாதபுரம் பகுதியில் நகர் வளர்ச்சிக்கு உதவும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித் தருமாறு கோரிக்கை வைத்தனர். அப்போது திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி



**மேலூர், மார்ச் 28-**

கொட்டாம்பட்டியில் தெற்கு ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி நடைபெற்றது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி ஆணைக் கிணங்கவும், கட்சியின் அமைப்புச் செயலாளரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், திருப்பரங்குன்றம் வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ அறிவுறுத்தலின் பேரில், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளரும், மேலூர் பி. பெரியபுள்ளான் என்ற செல்வம் எம்.எல்.ஏ ஆலோசனையின் பேரில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்ட கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வருகின்ற 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தல் பூத் கமிட்டி அமைத்ததை ஆய்வு செய்யும் பணியினை அமைப்புச் செயலாளரும், முன்னாள் ஆவின் தலைவர் தஞ்சை ஆர்.காந்தி ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அவை தலைவர் எஸ்.என்.ராஜேந்திரன் வரவேற்றார். மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ கே.தமிழரசன் முன்னிலை வகித்தார். கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய கழகசெயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் வெற்றிச்செழியன் தலைமை தாங்கினார். கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கருங்காலக்குடி, கம்பூர், கேசம்பட்டி, சேக்கிபட்டி, மேலவளவு, பட்டூர், சென்னகரம்பட்டி, எட்டிமங்கலம், பூதமங்கலம், கச்சிராயன்பட்டி, வஞ்சிநகரம், அட்டப்பட்டி, தும்பைபட்டி, கொடுக்கம்பட்டி, ஆகிய ஊராட்சிகளில் பூத் கமிட்டி நிர்வாகிகளை அறிமுகப்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஜபார் , மாவட்ட எம். ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளர் சேக்கிபட்டி சாகுல் ஹமீது, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் அன்புச்செல்வன், கொட்டாம்பட்டி ஒன்றிய நிர்வாகிகள் துணைச் செயலாளர் அப்துல் முத்தலிபு, இணைச் செயலாளர் ஆசைதம்பி நாச்சம்மாள், மாவட்ட பிரதிநிதிகள் முருகன், சாந்தி சின்னகருப்பன், ஒன்றிய கழக பொருளாளர் விஜயராகவன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் மனோகரன், ஒன்றிய இலக்கிய அணி செயலாளர் பழனிதுரை, ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் சந்திரன், ஒன்றிய எம்.ஜி.ஆர் மன்றசெயலாளர் பாலுச்சாமி, ஒன்றிய சிறுபான்மை செயலாளர் நூறு முகமது, இளைஞர் அணி இணைச் செயலாளர் வீரபாண்டி, ஒன்றிய பாசறை செயலாளர் கார்த்தி, கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள், கிளை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## ஹிந்தியில் வானிலை அறிவிப்பு:
# சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம்

**மதுரை , மார்ச் 28-**

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு ஹிந்தியிலும் வழங்கப்படுவதற்கு மதுரை மார்க்சிய கம்யூனிஸ்ட் எம்.பி. சு. வெங்கடேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பை வழங்கும் சென்னை மண்டல வானிலை மையம் தனது அன்றாட வானிலை அறிக்கையை ஹிந்தியிலும் வழங்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் பேரிடர் பாதிப்பு நிவாரணத்துக்கு நிதியுதவி அளிக்காத மத்திய அரசு, பேரிடர் முன்னறிவிப்பில் ஹிந்தியைத் திணிக்கிறது. பா.ஜ.க.விற்கு தமிழ்நாட்டு மக்களின் நலன் என்றுமே முக்கியமானதாக இருந்ததில்லை என்பதற்கு இந்நடவடிக்கை மற்றுமொரு உதாரணமாகும்'' என்று பதிவிட்டுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை, மும்மொழிக் கொள்கைக்கு எதிராக திமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் குரல் கொடுத்து வரும் நிலையில் வானிலை அறிக்கையில் ஹிந்தியைத் திணித்திருப்பது தமிழகத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றிய பகுதிகளில் சாலை அமைக்க அடிக்கல் நாட்டு விழா



**ஒட்டன்சத்தில், மார்ச் 28-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் கே. கீரனூர், ஐ.வாடிப்பட்டி, குத்திலிப்பை, சின்னக்காம்பட்டி, எல்லப்பட்டி , ஜவ்வாதுபட்டி ஆகிய ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலை அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா ஒன்றிய செயலாளர் ஜோதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றிய கழக பொருளாளர் அழகியணன், ஒப்பந்ததாரர் சேட் (எ) குப்புசாமி,

குத்திலிப்பை ராஜசேகரன், சின்னக்காம்பட்டி கருப்புசாமி, முருகேசன், எல்லபட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பாலசுப்பிரமணி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் முருகானந்தம், இளைஞரணி துணை அமைப்பாளர் நிகிலேஷ் குமார், ஒன்றிய விவசாய அணி துணை அமைப்பாளர் கந்தசாமி, ஒன்றிய தொண்டர் அணி துணை அமைப்பாளர் தமிழரசன், வெள்ளியன்வலசு தங்கராஜ், ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பிரபு, பொறியாளர்கள் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம்வடக்கு ஒன்றிய பகுதிகளில் சாலை அமைக்க அடிக்கல் நாட்டு விழா பெற்றது.

# முதுகுளத்தூர் அருகே அ.தி.மு.க. சார்பில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



**முதுகுளத்தூர், மார்ச் 28-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அ.தி.மு.க. மத்திய ஒன்றிய செயலாளர் முன்னாள் வெங்கல குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.டி. செந்தில்குமார் தலைமையில் காக்கூர் கிராமத்தில் பள்ளிவாசலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

உடன் ஜமாத் தலைவர் மற்றும் நிர்வாகிகள் ஒன்றிய அவைத் தலைவர் விளங்குளத்தூர் கோ. முத்து மணி ஒன்றிய துணைச் செயலாளர் செல்வநாயகபுரம் வெ. முருகேசன் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் காக்கூர் கருமலையான் மாவட்ட பிரதிநித கீழப்பனையூர் நாராயணன் மாவட்ட பிரதி நிதி மருதகம் தருமர் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர்

வெங்கலகுறிச்சி முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ராஜசேகர் கிளைக் கழக செயலாளர்கள் வெங்கல குறிச்சி கண்ணுச்சாமி காக்கூர் குருவராஜன்

புளியங்குடி அய்யாசாமி சோலைபுரம் ஞானசேகர் காக்கூர் நீலமேகம் குமாரகுறிச்சி உத்தண்டி ஆதனக் குறிச்சி காலனி வேலுச்சாமி சடையனேரி பழனி கீழக்குளம் மூர்த்தி எருதங்குளம் அருள்முருகன் தெற்கு காக்கூர் ராஜசேகர் காக்கூர் முருகன் காக்கூர் நீலமேகம்சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் தையல் தொழிலாளி தூக்குபோட்டு தற்கொலை

**நத்தம், மார்ச் 28-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டுப்பட்டி-புதூரை சேர்ந்தவர் முருகேசன் (42). இவர் நத்தம்- செந்துறை சாலையில் தையல் கடை நடத்தி வருகிறார். இந்நிலையில் இவர் கடந்த சில மாதங்களாக தீராத வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. இதனால் கடந்த சில நாட்களாகவே மன உளைச்சலில் இருந்த அவர் நேற்று காலை தையல் கடையில் மின்விசிறியில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி பரிசோதனைக்காக நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பரமக்குடி அருகே அரசு கேபிள் நிறுவனத்தின் வயர் மற்றும் இரும்பு பைப்புகள் திருட்டு

**பரமக்குடி, மார்ச் 28-**

பரமக்குடி நகரில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி ஒளிபரப்பு டிஜிட்டல் சிக்னல் டிஸ்டிரிபியூட்டர் வாயிலாக பரமக்குடி தாலுகா முழுவதும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. மேற்படி ஒளிபரப்பு நயினார்கோவில், அண்டக்குடி, பாண்டியூர், மஞ்சக்கொல்லை, முத்துவயல், சத்திரக்குடி, போகலூர் மற்றும் கமுதக்குடி, பார்த்திபனூர், பகுதிகள் வரை ஆப்டிகல் பைபர் கேபிள் (ஓஎப்சி) வழியாக கடந்த 15 வருடங்களாக தாலுகா முழுவதும் உள்ள ஆப்பரேட்டர்களுக்கு ஒளிபரப்பை வழங்கி வருகிறது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக அண்டக்குடி, வலசை, நயினார்கோவில் மற்றும் முத்துவயல், கமுதக்குடி பகுதிகளில் ஓ எப் சி வயர் கொண்டு செல்லும் வழித்தடங்களில் உள்ள இரும்புப் பைப்புகளை அறுத்து திருடிச் செல்கின்றனர்.மேலும் ஆங்காங்கே ஓ எப் சி வயர்களை சேதப்படுத்தி ஒளிபரப்பை தடைசெய்யும் நோக்கத்தோடு இதில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இது சம்மந்தமாக நயினார்கோவில் மற்றும் சத்திரக்குடி காவல் நிலையங்களில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.மேற்படி நபர்களை கண்டறிவதில் காவல் துறையினர் ஆங்காங்கே சிசிடிவி கேமரா கண்காணிப்பின் மூலம் கவனித்து வருகின்றனர். பொதுமக்களும் இதைப் பற்றித் தெரிந்தால் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்குமாறு பரமக்குடியில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில் பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சந்தித்து 2023-24-ம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தமிழ்நாடு அரசின் பங்கு தொகையான 1 கோடியே 21 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் சந்தித்து, மதுரையில் 2.4.2025 முதல் 6.4.2025 நடைபெறவுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது அகில இந்திய மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### எங்களுக்கு பாடம் எடுக்க வேண்டாம்:

# எங்கள் எதிர்ப்புக் குரல் வாக்கு அரசியலுக்கான கலவரம் அல்ல

## உ.பி. முதல்வர் யோகிக்கு முதல்வர் ஸ்டாலின் பதில்

**சென்னை, மார்ச் 28-**

மும்மொழிக் கொள்கை எதிர்ப்பு வாக்கு அரசியலுக்கான கலவரமில்லை. அது நீதிக்கான போர் என்று உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு பதிலடி கொடுத்துள்ளார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இது தொடர்பாக ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "இருமொழிக் கொள்கை, நியாயமான தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் தமிழகத்தின் நியாயமான, வலுவான குரல் தேசிய அளவில் ஒலிப்பதால் பா.ஜ.க. கலக்கமடைந்துள்ளது. அக்கட்சியின் தலைவர்கள் அளிக்கும் பேட்டியில் அது புலப்படுகிறது.

உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் நமக்கு வெறுப்பு பற்றி பாடம் எடுக்கிறார். எங்களை விட்டுவிடுங்கள். அவர் வெறுப்பு பற்றி பாடமெடுப்பது நகைமுரண். அரசியல் அவல நகைச்சுவையன்றி வேறு என்னவாக இருக்க முடியும். நாங்கள் எந்த மொழியையும் எதிர்க்கவில்லை. ஆதிக்கத்தை, திணிப்பைத் தான் எதிர்க்கிறோம்.

இது வாக்கு அரசியலுக்கான கலவரம் அல்ல. நீதிக்கான, மாண்புக்கான போர்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக ஏ.என்.ஐ. ஊடகத்திற்கு யோகி ஆதித்யநாத் அளித்த பேட்டியில், "மொழி என்பது மக்களைப் பிரிக்காமல் ஒன்றிணைக்க வேண்டும். தமிழ் இந்தியாவின் பழமையான மொழிகளில் ஒன்று.

மேலும் அதன் வரலாறு சமஸ்கிருதத்தைப் போலவே பழமையானது. காசி தமிழ் சங்கமம் வாரணாசியில் நடக்கிறது. ஒவ்வொரு இந்தியரும் தமிழ் மீது மரியாதை வைத்துள்ள நிலையில், அவர்கள் ஏன் இந்தியை வெறுக்க வேண்டும்?

இது வெறும் குறுகிய அரசியல். தி.மு.க.வின் வாக்கு வங்கி ஆபத்தில் இருப்பதாக உணர்ந்ததால், மாநிலங்கள் மற்றும் மொழி அடிப்படையில் மு.க.ஸ்டாலின் பிளவுகளை ஏற்படுத்த முயற்சி செய்கிறார். மக்கள் எப்போதும் இதுபோன்ற பிளவுவாத அரசியலுக்கு எதிராக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அனைவரும் அனைத்து மொழிகளையும் கற்க வேண்டும். உத்தர பிரதேசத்தில் தமிழ், தெலுங்கு மற்றும் பிற மொழிகளை கற்பிக்கும் போது, தமிழக பல்கலைக் கழகங்களில் இந்தியை கற்பிப்பதில் என்ன தவறு. தொகுதி மறுவரையறை குறித்து உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்கிவிட்ட பின்னரும் அரசியலுக்காக ஸ்டாலின் அதுகுறித்து குற்றம்சாட்டுகிறார்." என்று குற்றஞ்சாட்டியிருந்தார். இந்நிலையில், இதற்கு பதிலளிக்கும் வகையில் ஸ்டாலின் ட்விட் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வக்பு திருத்த சட்டத்திற்கு எதிரான...(1-ம் பக்க தொடர்ச்சி)

வக்பு சட்டத்தின் பிரிவு 40-ஐ நீக்குவது. வக்பு வாரிய சொத்து அடையாள அதிகாரத்தை அகற்றி, அதை அரசுக்கு மாற்றுகிறது. இது அரசியலமைப்பின் பிரிவு 26-ன் கீழ் மத சுதந்திரத்தை மீறுவதாகும். வக்பு பயனர் என்ற பிரிவை நீக்கத் திட்டமிட்டுள்ளார்கள். நீண்டகால பயன்பாட்டின் அடிப்படையில் வக்பு சொத்துக்களை அங்கீகரிக்கும் பாரம்பரியத்தை இது அகற்றுகிறது.

### கூட்டுக்குழு நிராகரிப்பு...

இது சிறுபான்மை இஸ்லாமிய மக்களின் மத உணர்வுகளைப் பாதிப்பதாகவும் இருக்கிறது. இதனை பாராளுமன்றக் கூட்டுக்குழுவிடம் 30.9.2024 அன்று தமிழக அரசு தெளிவாக கூறியிருக்கிறது. பாராளுமன்றக் கூட்டுக்குழுவில் இடம்பெற்றிருக்கக் கூடிய தி.மு.க. உறுப்பினர்களான ஆ.ராசா, எம்.எம்.அப்துல்லா ஆகியோர் கடுமையாக தங்களது கருத்துகளைப் பதிவு செய்தனர். தி.மு.க. மட்டுமின்றி இந்தியாவில் உள்ள முக்கிய கட்சிகளும் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திருத்தங்களை பாராளுமன்றக் கூட்டுக்குழு நிராகரித்திருக்கிறது.

### எதிர்ப்பைப் பதிவு...

பாராளுமன்றக் கூட்டுக்குழுவின் முடிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதலும் வழங்கிவிட்டது. இந்நிலையில், வக்பு திருத்த சட்டமானது எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம். இஸ்லாமிய மக்களை வஞ்சிக்கும் இந்த சட்டத்துக்கு எதிராக நமது எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டியது அவசிய அவசரமென்று நான் கருதுகிறேன்.

சிறுபான்மையின மக்களுக்கு எதிரான மதசுதந்திரத்தை நிராகரிக்கும், அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான, வக்பு நோக்கத்துக்கு எதிரான, நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு முரணான, குழப்பமான, தேவையற்ற, பல்வேறு பிரிவுகள் வக்பு சட்டத்திருத்தத்தில் இருக்கின்றன. இந்த திருத்த சட்டமானது வக்பு அமைப்பையே காலப்போக்கில் செயல்படவிடாமல் முடக்கிவிடும். எனவே, நாம் இதனை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மத நல்லிணக்கம், அனைவருக்குமான அரசியல் என்ற இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் இந்த தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### தீர்மானம் முன்மொழிவு:

இந்திய திருநாட்டில் மத நல்லிணக்கத்துடன், அனைத்து மதங்களைச் சேர்ந்த மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அனைத்து மக்களுக்கும் அவரவர் மதங்களைப் பின்பற்றுவதற்கு, அரசமைப்புச் சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது. அதைப் பேணிக் காக்கும் கடமை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் அமைப்புகளுக்கு உள்ளது.

ஆனால், அதற்கு மாறாக சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995-ம் ஆண்டின் வக்பு சட்டத்தை திருத்துவதற்கு, கடந்த 2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்திய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு வாரிய சட்டத்திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை தமிழக சட்டப்பேரவை வலியுறுத்துகிறது," என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

### ஒருமனதாக நிறைவேற்றம்...

தொடர்ந்து தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது. அப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். வக்பு தீர்மானத்திற்கு பா.ஜ.க. மட்டும் எதிர்ப்பு தெரிவித்து சட்டசபையில் இருந்து வெளியேறியது. அ.தி.மு.க., பாமக உள்ளிட்ட கட்சிகள் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தன. இதனையடுத்து வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிராக முதல்வர்மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தனித் தீர்மானம் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# கருப்பசாமி பாண்டியன் உடலுக்கு எடப்பாடி பழனிசாமி நேரில் அஞ்சலி

**நெல்லை, மார்ச் 28-**



அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கருப்பசாமி பாண்டியன் உடலுக்கு எடப்பாடி பழனிசாமி அஞ்சலி செலுத்தினார்.

நெல்லையில் அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கருப்பசாமி பாண்டியன் சமீப காலமாகவே வயது முதிர்வின் காரணமாக உடல்நலக்குறைவு இருந்து வந்தாலும், கட்சி பணிகளை திறம்பட மேற்கொண்டு வந்தார். கடந்த 1 வாரமாக சற்று உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணி அளவில் கருப்பசாமி பாண்டியன் மரணம் அடைந்தார்.

அவரது உடலுக்கு நெல்லை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.. செயலாளர் தச்சை கணேசராஜா தலைமையில் முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி, அமைப்பு செயலாளர் சுதா பரமசிவம், முன்னாள் எம்.பி. வசந்தி முருகேசன், எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் கல்லூர் வேலாயுதம், கொள்கை பரப்பு துணை செயலாளர் பாப்புலர் முத்தையா, பொருளாளர் வக்கீல் ஜெயபாலன், அன்பு அங்கப்பன், அவைத்தலைவர் பரணி சங்கரலிங்கம், சந்திரசேகர் மற்றும் தொண்டர்கள் அஞ்சலி செலுத்தினர்.

ம.தி.மு.க.வினர் துணைச் பொதுச்செயலாளர் தி.மு.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் நிஜாம் ஆகியோர் தலைமையில் அவருடைய உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். நாங்குநேரி தொகுதி எம்.எல்.ஏ. ரூபி மனோகரன் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். முன்னாள் மாவட்ட தலைவர் தமிழ் செல்வன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். எஸ்.டி.பி.ஐ. கட்சியினர் மாநில தலைவர் நெல்லை முபாரக், மாவட்ட தலைவர் கனி ஆகியோர் தலைமையில் அஞ்சலி செலுத்தினர். கருப்பாசாமி பாண்டியன் உடல் திருத்து கிராமத்தில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கருப்பசாமி பாண்டியன் உடலுக்கு எடப்பாடி பழனிசாமி நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். பாளையங்கோட்டை அடுத்த திருத்து பகுதியில் அவருடைய இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள உடலுக்கு எடப்பாடி பழனிச்சாமி மற்றும் முன்னாள் அமைச்சர்கள் நேரில் சென்று மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.




● சென்னை பி.எம்.பிர்லா கோளரங்க வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், தமிழ்நாடு தேர்வாணையம் வாயிலாக உயர்கல்வித்துறைக்கு தேர்வு செய்யப்பட்ட 50 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



● தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் 2025-2026-ம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை சார்ந்த அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● சென்னை அண்ணா பல்கலைக்கழக விவேகானந்தர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநில அளவில் நடைபெற்ற இலக்கிய மன்றம் மற்றும் வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.